விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 06 புதன்கிழமை (18.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 061

# குற்றவாளிகள் தப்பிக்க இடமளிக்கப்படக் கூடாது

## சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிப்பதை தாமதப்படும் முடிவின் காரணமாக குற்றம் புரிந்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பி செல்வதற்கு இலங்கை இடமளிக்கக் கூடாது என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய வலய பணிப்பாளர் ரிச்சாட் பெனாட் தெரிவித்துள்ளார்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தாவிடம் மேலும் ஒரு வாக்குமூலம்



(கொழும்பு)

முன்னாள் பதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம், குற்றத்தடுப்பு 23 ஆம் பக்கம் பார்க்க....

## கனகசுந்தரசுவாமி நேற்றுக் காலமானார்



(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முலலைத்தீவு மாவட்ட வட மாகாண சபை உறுப்பினர் வீரவாகு கனக சுந்தரசுவாமி (வயது-67) நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார். 24 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை - இந்திய நெருக்கத்தை சீனா மகிழ்ச்சியுடன் வரவேற்பு



(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கம் சீனாவுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக, சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சீன வெளிவிவகார அமைச்சின் பெண் பேச்சாளர், ஹுவா சுன்யிங்கிடம், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில், அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாடு உள்ளிட்ட உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளது 24 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரிபாலவின் அடுத்த பயணம் சீனாவிற்கு

### முன்னர் பீஜிங் விரைவார் மங்கள

(புதுடில்லி)

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தனது இரண்டாவது இராஜாங்க விஜயமாக சீனாவிற்கு விரைவில் பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த வாரம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவின் தலைநகரமான பீஜிங்கிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இந்தியாவிற்கு அடுத்த பயணமாக சீனாவுக்கு சிறிசேன செல்வார என எதிர்பார்க்கப்படுகிறது.

பெப்ரவரி 27,28 ஆம் திகதிகளில் பீஜிங்கிற்கு அமைச்சர் மங்கள சமரவீர பயணம் மேற்கொள்ளவுள்ள 24 ஆம் பக்கம் பார்க்க....

## அறிக்கை பிற்போட்டமை ஏமாற்றம் அளிக்கின்றது

### ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற இனப்படு கொலையை ஐ.நா. வரை கொண்டு செல்ல உழைத்த ஈழத்தமிழர்கள், புலம் பெயர் மக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களிற்கும் விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டுள்ளமை ஏமாற்றமளிக்கின்றது என ஒபாமாவிற்கான தமிழர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஐ.நா, மனித உரிமைகள் கவுனஸிலின் மேற்பார்வையின் கீழ் உள்ளக விசாரணை இடம்பெறுவதற்கு உத்தரவாதம் கொடுத்தால் அதை நாம் வரவேற்போம் என கூட்டமைப்பு கூறியிருப்பதானது விசாரணையை 24 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்தியா அவதானிக்கின்றது - பிரணாப்



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்தியா மிகவும் ஆழமாக அவதானித்து வருகிறது என இந்தியக் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி கருத்து வெளியிட்டுள்ளார். இந்தியாவிற்கு விஜயம் மேற் கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதிக்கு ராஷ்டிரபதி பவனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசார நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்தியாவிற்கே முதலில் விஜயம் மேற்கொள்ள வேண்டும் என்ற இலங்கை ஜனாதிபதியின் முடிவை அவர் பாராட்டியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் 24 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ் - வன்னி - மட்டக்களப்பு கட்டளை தளபதிகள் இடமாற்றம்

### 15 மேஜர் ஜெனரல்கள், 3 பிரிகேடியர்கள் மாற்றப்பட்டனர்

(கொழும்பு)

இராணுவ சேவையில் உள்ள 15 மேஜர் ஜெனரல்கள் மற்றும் மூன்று பிரிகேடியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் தயா ரத்நாயக்கவின் பணிப்பில் சேவை அவசியம் கருதி இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி இராணுவ சுயாதீனப் படையின் அதிகாரியாக செயற்பட்ட மேஜர் ஜெனரல் லலித் தலுகல இராணுவ தலைமையக அபிவிருத்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுளளார்.

தலைமையகத்தின் கட்டளையதிகாரியாக இருந்த லால் பெரேரா கிழக்கு மாகாண தலைமை யகத்துக்கு மாற்றப்பட் 23 ஆம் பக்கம் பார்க்க....

## சுவர் இடிந்து வீழ்ந்ததில் 2 வயது குழந்தை மரணம்

### விக்கிராவை நலன்புரி முகாமில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நலன்புரி முகாமில் உள்ள வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இரண்டு வயது குழந்தையொன்று உடல் நசியுண்டு உயிரிழந்துள்ளது.

இப் பரிதாப சம்பவம் யாழ். சுன்னாகம் கந்தரோடையில் அமைந்துள்ள விக்கிராவை நலன்புரி முகாமில் நேற்று காலை 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் குறித்த நலன்புரி முகாமில் வசித்து வருகின்ற ரமேஸ் பிரியங்கா (வயது 2) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் தெல்லிப்பழை 24 ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழுவினருக்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம், ராஷ்டிரபதி பவனில் இராப்போசன விருந்தளித்தார். இரு நாடுகளினதும் கலாசாரத்துக்கு ஏற்ப இந்த விருந்துபசாரம் நடைபெற்றது.




இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் புதுடில்லியில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, இந்தியாவின் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அமைச்சர் மனோகர் பரிக்கர், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரைச் சந்தித்தார். மேலும் ஜனாதிபதி குழுவினர் இந்திய தேசிய அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டிருந்தனர்.




# தாமதமாகும் விசாரணை அறிக்கை செப்ரெம்பரில் மீள்வெளிவர வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கை தாமதப்படுத்தப்பட்டிருந்தாலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அவ் அறிக்கையினை உறுதியாக ஐ.நா மனிதவுரிமைகள் பேரவை வெளியிடவேண்டுமென வலியுறுத்தியுள்ள யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இவ் விசாரணை அறிக்கையூடாக நீதி விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் அ.இராசகுமாரன் தெரிவிக்கையில்,

இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கையை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தோம். ஆனால் அறிக்கை ஏமாற்றமளிக்கும் வகையில் பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கையிலே நடைபெற்ற உள்ளக விசாரணைகள் நீதியான முறையில் நடைபெறாத நிலையில்தான் சர்வதேச விசாரணையைநம்பியிருந்தோம். ஆனால் விசாரணை அறிக்கை தாமதப்படுத்தப்பட்டுள்ளதாக அறிந்தோம். இது எமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது.

இங்கு தமிழ் மக்களிற்கு எதிராக நடைபெற்ற அனைத்து அட்டூழியங்களிற்கும் எதுவிதமான தீர்வும் ஏற்படாது விடுமோ என்ற அச்சம் எமக்கு ஏற்படுகின்றது.

இது ஒட்டுமொத்த ஈழத்தமிழ் மக்களிடையே மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அவர்கள் இவ் அறிக்கையை கட்டாயம் வெளியிடுவோம் என்று கூறுகின்றார்கள் அது வரவேற்கத்தக்க விடயம்.

இங்கே அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது என கூறுகின்றார்கள். ஆனால் புதிய அரசு வந்து ஒரு மாதகாலத்திற்கும் மேலாகிவிட்டது. ஆனால் இங்கே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. நடந்தவை சிறுமாற்றங்களே கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிக்கப்படவில்லை. சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை.

இவ்வாறு ஒன்றுமே வழங்கப்படாத நிலையிலும் அரசியல் உரிமைக்காக நாம் சர்வதேசத்திடம் உதவியினை நாடியிருந்தோம்.

இவ் விசாரணை அறிக்கை உறுயாக வெளியிடப்படவேண்டும் அதன் மூலம் சர்வதேச நீதி விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென எதிர்ப்பார்க்கின்றோம் என இராசமாரன் தெரிவித்தார். (செ-4)

**தவறிவிட்டது**

ஆதாம்பாபா முகமது சலீபு என்னும் பெயருடைய சாரதி அனுமதிப் பத்திரமும் (NOA007568118) கைப்பையும் 26.01.2015 ஆம் திகதி மூத்தவிநாயகர் கோயில் உடுப்பிட்டி வீதிக்கும் பொலிகண்டி வல்வெட்டித்துறைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதுபற்றி அறிந்தவர்கள் தயவுசெய்து தொ.பே:-0777210145 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## ஜனாதிபதி மாளிகைகள் ஹோட்டல்களாக மாற்றம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் போது அறுகம்பே மற்றும் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட சொகுசு ஜனாதிபதி மாளிகைகள் இரண்டும் ஹோட்டல்களாக மாற்றப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மாளிகைகள் இரண்டும் ஜனாதிபதி செயலக நிதியத்திலிருந்தே நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவற்றை நிர்மாணிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளவில்லை என்றும் அவற்றை நிர்மாணிப்பதற்காக 90 பில்லியன் ரூபாயுக்கு அதிகமாக தொகை செலவிடப்பட்டுள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# தாமதப்படுத்தப்பட்ட விசாரணை அறிக்கை செப்ரெம்பரில் பலமிக்கதாக வெளிவரும்

## சாட்சியங்கள் மேலும் சேர்க்கப்படும் என்கிறது த.தே.கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கை வெளியிடுவதில் தாமத மேற்படுத்தப்பட்டிருந்தாலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளியாகவுள்ள அறிக்கை மேலும் பலமுள்ளதாக அமையும்,

இக்கால இடைவெளிக்குள் ஐ.நா மனிதவுரிமைகள் சேவையின் அறிக்கையினை பலப்படுத்தும் வகையில் நாம் செயற்படல் வேண்டுமென தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் முன்னைய விசாரணையில் சாட்சியமளிக்கத்தவறியவர்களினை தற்போது சாட்சியமளிக்க முன்வருமாறும் கோரியுள்ளார்.

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள விடுதியொன்றில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் புதிய அரச பொறுப்பேற்ற பின்னர் இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கையினை பிற்போடுமாறு கோரியிருந்தனர். அதற்கமைய ஐ.நா மனிதரிமை ஆணையாளர் அதனை ஒத்திவைத்துள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் நீதிக்காக பலகாலம் காத்திருக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. உண்மையினை மூடி மறைப்பதன் மூலம் உண்மையான நல்லிணக்கத்தினை பெற்றுவிட முடியாது.

நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றத்தினை வரவேற்கின்றோம் ஆனால் அந்த மாற்றத்தினை ஏற்படுத்திய மக்களிற்கும் பலன் கிடைக்க வேண்டும். புதிய மாற்றம் சரியான பாதையில் பயணிக்கவேண்டும்.

ஐ.நா விசாரணை அறிக்கை மார்ச் மாதம் வெளியிடப்படவேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவிருந்தது. இது தொடர்பில் ஆணையாளர் அலுவலகத்திற்குச் சென்று பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டிருந்தோம்.

துரதிர்ஷ்டவசமாக அறிக்கை பிற்போடப்பட்டுள்ளது. எம்மை பொறுத்தவரையில் அறிக்கை எப்போது வெளியாகும் என்பதில் முக்கியமில்லை. வெளியாகின்ற அறிக்கை பலமானதாக இருக்க வேண்டும்.

அறிக்கையினைபிற்போட்டுள்ள ஆணையாளர் இலங்கையில் மாறுபட்டு கொண்டிருக்கும் சூழ்நிலை, இந்த அறிக்கையினை இன்னும் பலமுள்ளதாக இக்கால இடைவெளிக்குள் மாற்றுவது பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தான் எனக்கு முக்கியம் எனவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டத்தில் எமக்கு குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களிற்கு ஏமாற்றத்தினையளித்திருந்தாலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளிவரவுள்ள அறிக்கை பலமானதாக இருக்கும் என நம்புகின்றோம்.

இக்கால இடைவெளியினைப் பயன்படுத்தி சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்க தவறியவர்கள் சாட்சியமளிக்க முன்வரல் வேண்டும் என்றார்.

ஐ.நா தரத்திலான உள்ளக விசாரணையினை ஏன் ஏற்றுக் கொண்டீர்கள்? அதனை உங்கள் சார்ந்த கட்சியினரே விமர்சிக்கின்றார்களே என கேட்டதற்கு,

நாம் ஐ.நா தரத்திலான உள்ளக விசாரணையினை ஏற்றுக் கொள்ளவில்லை. ஐ.நாவின் உள்ளக விசாரணையையே ஏற்றுக் கொண்டுள்ளோம். இதனை புரிந்து கொள்ள முடியாதவர்கள் விமர்சிக்கலாம் என்றார்.

ஐ.நா விசாரணை அறிக்கையினை பிற்போடுவதற்கு இலங்கையின் புதிய அரசு அளித்த வாக்குறுதிகளினை நிறைவேற்றா விட்டால் கூட்டமைப்பு என்ன செய்யப் போகின்றது என கேட்டதற்கு,

இலங்கை மீதுள்ள சர்வதேசத்தின் கோபம் பல மடங்காக அதிகரிக்கும். இலங்கைக்கு ஆதரவாக உள்ள நாடுகள் (இந்திய உட்பட) எதிரான நிலைப்பாட்டை எடுக்கும். ஆகவே எழுத்து மூலமான வழங்கப்பட்ட வாக்குறுதியினை நிறைவேற்றாமல் விட முடியாது என்றார். (செ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உண்மையை வெளிக்கொணர்வதே நல்லிணக்கத்தை ஏற்படுத்த சிறந்த வழியாகும்!

## பிரிட்டன் அறிவுரை

(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கத்தை கொண்டு வருவதற்கு போரின்போது இடம்பெற்ற சம்பவங்களின் உண்மைகளை வெளிக்கொணர்வது முக்கிய விடயமாக இருக்கும் என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது. இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை செப்டெம்பருக்கு பிற்போட்டுள்ளமை தொடர்பில் கருத்துரைத்துள்ள பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஹுகோ ஸ்வைரி இதனை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கை தொடர்பான அறிக்கையை செப்டெம்பர் வரைக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஒத்திவைத்தமை மூலம் குற்றவாளிகள் தப்பிக்க இடமுண்டு என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற ஆட்கடத்தல்கள், கொலைகள், சட்டவிரோத கைதுகள் ,காணாமற் போதல் போன்ற விடயங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் ஐக்கிய நாடுகளின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

எனினும் அவர்களுக்கு தற்போது ஏமாற்றம் ஏற்பட்டுள்ளதாக மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக் வலயப்பணிப்பாளர் ரிச்சட் பேனாட் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் இந்த தாமதிப்பு புதிய இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து உரிய தகவல்களைப் பெற்று உண்மைக் குற்றவாளிகளை சட்டத்துக்கு முன் கொண்டு வந்தால் மாத்திரம் நியாயப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று பேனாட் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மகிந்தவிற்கு ஆதரவான கூட்டத்தில் மேல் மாகாண சபை உறுப்பினர்கள்!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக இன்று நடைபெறவுள்ள கூட்டத்தில் மேல் மாகாணசபை உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பெரும் எண்ணிக்கையிலான மாகாணசபை உறுப்பினர்கள இக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

உதய கம்மன்பில, தினேஸ் குணவர்தன, விமல் வீரவன்ச மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றவர்களினால் இன்று நுகேகொடையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு ஆதரவளிக்கும் நோக்கில் விசேட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சுமார் 40 மேல் மாகாணசபை உறுப்பினர்கள் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுவாஸ்திபுரவில் மேல் மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

மகிந்தவிற்கு ஆதரவான கூட்டத்தில் பங்கேற்பதா?இல்லையா? என்பது குறித்து தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் கூட்டம் நிறைவடைந்தது. பின்னர் நுகேகொடை கூட்டத்தில் பங்கேற்பது என பெரும்பான்மையான உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

மேல் மாகாணசபையில் 56 ஆளும் கட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதில் 40 பேர் கூட்டத்தில் பங்கேற்க தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, மகிந்தவிற்கு ஆதரவான நுகேகொடை கூட்டத்தில் பங்கேற்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## விமலின் மனைவியை கைதுசெய்ய அமை.ஜோன் அமரதுங்க உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்சவை கைது செய்யுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அமைச்சர் அமரதுங்க நேற்று முன்தினம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரின் மனைவிக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.



கடவுச் சீட்டுக்களில் பிறந்த திகதி உள்ளிட்ட தகவல்களை மாற்றியமைத்து பெற்றுக்கொண்டுள்ளதாக குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

சாதாரண கடவுச் சீட்டு மற்றும் இராஜதந்திர கடவுச்சீட்டுக்களில் பெயர், பிறந்த திகதி உள்ளிட்ட தகவல்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில் பெரும்பாலும் சசி வீரவன்சவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்வார்கள் என உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (இ)

## நுகேகொடை கூட்டத்திற்கு நான் செல்லப் போவதில்லை

### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

மீண்டும் அரசியலுக்கு வரும் எந்த எண்ணமும் தனக்கில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி நுகேகொடையில் இன்று பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

அந்த கூட்டத்தில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். தனக்கு நெருக்கமான சிலரிடம் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

செயற்பாட்டு ரீதியான அரசியலுக்கு மீண்டும் வரும் எண்ணம் தனக்கில்லை எனவும் தனது புதல்வரான நாமல் ராஜபக்ஷவின் எதிர்கால அரசியல் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார். (இ)

## பாகிஸ்தானிலிருந்து 1000 கிலோ ஹெரோயின்

சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரரான வெலே சுதாவுக்கு பாகிஸ்தானிலிருந்து 1000 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோகண தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டிலிருந்தே 1000 கிலோ ஹெரோயின் கடத்தப்பட்டதாகவும் பாகிஸ்தானைச் சேர்ந்த முஹமட் சித்திக் என்ற நபரே வெலே சுதாவுக்கு போதைப் பொருட்களை விநியோகித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கருதப்படும் 130 பேரிடம் வாக்கு மூலங்களை பெற்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-5)

## இராசி பலன்

18.02.2015
(மாசி 06, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
சதுர்த்தசி காலை 8.54 மணிக்கு,
திருவோணம் முற்பகல் 9.22 மணிவரை
இராகுகாலம் 12.32-2.02 மணிவரை
சுபநேரம் 5.02-6.32 மணிவரை

வளவன்

**மேடம்:** புத்திசாதுர்யமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர் சந்திப்புண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்:** குறைவாகப் பேசினாலும் குறை கூறாமல் இருப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம்.

**கடகம்:** எண்ணிய காரியங்கள் கைகூடும் நாள், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறும், சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சுமுகமாக முடியும், பிள்ளைகள் பொறுப்புடன் நடந்து கொள்வர்.

**துலாம்:** புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, வருமானம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சிதரும் தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** மன அமைதிக்காக மகத்தான வழிபாடுகளை செய்ய வேண்டிய நாள், திடீர் பயணங்கள் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** வேலையில் சிறு அலைச்சல்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்:** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 148

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

...உண்மையான மனைவியோ அல்லது கணவனோ உங்கள் மனதில் உள்ள உருவத்திற்கு ஒரு கீழ்த்தரமான மாற்றாகவே இருக்கிறார்கள். உங்கள் இச்சை இப்பொழுது மாசுபட்டு விடுகிறது.

நீங்கள் இந்த வகையில் ஈடுபட்டீர்களானால் ஒரு கொடிய சுழலில் சிக்கிக் கொள்கிறீர்கள். அதனால் தான் உங்களால் அதனுள் ஆழமாகச் சென்று விட்டு அதிலிருந்து வெளியவந்து விட முடியவில்லை ஆனால் மேலும் மேலும் அதிக ஆசையுடன் திரும்ப வருகிறீர்கள். நீங்கள் அதனுள் ஆழமாகச் சென்றால் அதிலிருந்து மலர்ந்து வெளிய வருவீர்கள்.

அதனால் தான் முந்தைய நாட்களில் மக்களால் அவர்களது இச்சைய 40 வயதில் விட முடிந்தது. அவர்கள் மனதில் ஒருபோதும் இவ்வளவு சிக்கலான உருவங்களை வைத்துக் கொண்டதில்லை. அவர்கள் நேரடியாக அவர்களது கணவனுடனோ அல்லது மனைவியுடனோ தொடர்பு கொண்டனர். அதனால் தான் அவர்களால் சிறிய வயதிலயே அதிலிருந்து மலர்ந்து வெளிவர முடிந்தது. அவர்களால் இச்சையினுள் ஆழமாகச் சென்று விட்டு அதிலிருந்து வெளியே வர முடிந்தது. இச்சையே அவர்களிடமிருந்து விழுந்து விட்டது. அவர்கள் அதை விட வேண்டியிருக்க வில்லை.

இந்தியத் திருமணங்களில் புரோகிதர்கள் ஒரு அழகான சுலோகத்தை தம்பதியரைச் சொல்ல வைப்பார்கள். மனைவி கணவனிடம் சொல்லுவாள் நீ என்னுடைய 11ஆவது மகனாக இரு கணவன் மனைவியிடம் சொல்லுவான். நீ என்னுடைய 11ஆவது வருடத்தில் அவர்கள் ஒருவரை யொருவர் மகனாகவும் மகளாகவும் பார்ப்பார்கள். உறவுமுறை அந்த அளவு உருமாற்ற மடைந்திருக்கும்!



உங்கள் குழந்தைகளைப் பார்க்கும் பொழுது நீங்கள் மிக்க மகிழ்ச்சியால் சூழ்ப்படுகிறீர்கள். இல்லையா? உங்கள் கணவன் அல்லது மனைவியுடன் உங்கள் உறவு இந்த அளவிற்கு உருமாற்றமடைந்திருந்தால் நீங்கள் உங்கள் கணவனை அல்லது மனைவியைப் பார்க்கும் பொழுதும் அதே மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். கணவன் அந்தப் பெண்ணுடைய மகளாகவும் மனைவி இந்த ஆணுடைய மகளாகவும் ஆகிவிடுவார்கள்.

உங்கள் கற்பனையைப் பற்றிய ஒரு தெளிவான புரிந்து கொள்ளுதல் இல்லாவிட்டால் நீங்கள் துக்கப்படுகிறீர்கள். புரிந்து கொள்ளுதலே அதனை விட்டு வெளிய வரும் திறவுகோல் உங்களுக்குத் துன்பப்படாமல் எப்படி வாழ்வது என்பது தெரிந்திருந்தால் நீங்கள் ஒரு ஆன்மீக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு துன்பத்தை தவிர்க்கத் தெரியவில்லையென்றால் நீங்கள் உலகாயதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இரண்டு விதமான வாழ்க்கைதான் இருக்கிறது. புரிந்து கொள்ளுதலுடன் கூடிய வாழ்க்கை மற்றும் புரிந்து கொள்ளுதல் இல்லாத வாழ்க்கை புத்தா வாழ்க்கை மற்றும் புத்து (மூட்) வாழ்க்கை.

உங்களுடைய ஆசைகளையும் கனவுகளையும் போட்டுக் குழப்பிக் கொள்கிறீர்கள். அதனால் தான் நீங்கள் எங்கிருந்தாலும் சந்தோசமாக இல்லை. நீங்கள் தரையில பாய்மீது அமர்ந்திருக்கும் பொழுது நாற்காலி கிடைத்தவுடன் சிம்மாசனத்தை நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். சிம்மாசனம் கிடைக்கும் பொழுது அதை அனுபவிக்கும் திறனை இழ்ந்து விடுகிறீர்கள். நான் சொல்ல முயற்சிப்பதைப் பின் தொடர முடிகிறதா?

உங்களுடைய இச்சை எந்த விதமான குற்ற உணர்வோ அல்லது ஆசையோ இல்லாமல் பரிசுத்தமாக இருக்குமானால் நீங்கள் எந்த விதமான குற்ற உணர்வோ அல்லது கற்பனையோ இல்லாமல் அதனுள் ஆழ்ந்து சென்று அதிலிருந்து மலர்ந்து வருவீர்கள். உங்களுடைய மூளைப் படிவங்கள் செயல்படத் தொடங்கும் பொழுதுதான் உங்கள் சேகரிக்கப்பட்ட கற்பனைகளையும் கனவுகனையும் உள்ளே கொண்டு வந்து இச்சையிலிருந்து மலர்ந்து வெளிவராமல் தவறுகிறீர்கள். உங்களது மூளைப் படிவங்களை விட்டு விட்டு உங்கள் உடலையும் மற்றவரின் உடலையும் நோக்கிய அன்பை உணரத்தொடங்குங்கள். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

## உலகின் மிகப்பெரிய சோலார் டெலஸ்கோப்



சோலார் தொழில்நுட்பத்தில் இயங்கும் உலகின் மிகப்பெரிய டெலஸ்கோப் (வானியல் தொலைகாட்டி) ஹவாய் தீவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

Daniel K Inouye Solar Telescope (DKIST) எனப்படும் இத்தொலைகாட்டியை நிர்மாணிப்பதற்கு 344 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2019ஆம் ஆண்டளவில் இதன் கட்டுமாணப்பணிகளை முடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் 4.24 மீற்றர் அகலம் கொண்டதும் 75 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதுமான [illegible]வாடி பயன்படுத்தப்படவுள்ளது.

இத்தொலைகாட்டியின் மூலம் 100 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஒரு அங்குல [illegible]ட்டம் கொண்ட சிறிய நாணயத்தினையும் துல்லியமாக [illegible] முடியும்.

# சமைப்போம் சுவைப்போம்

## ரிப்பன் பகோடா

**தே.பொருட்கள்:-**

சமையல்:தீபாவளி ஸ்பெஷல்: ரிப்பன் பக்கோடா
கடலை மாவு - 3 கப்
அரிசி மாவு - 1 கப்
மிளகாய் தூள் - 5 டீ ஸ்பூன் (அ) தேவையான அளவு
உப்பு - தேவைக்கேற்ப
சோடா மாவு - சிட்டிகை அளவு
எண்ணை பொரித்தெடுக்க
முறுக்குக் குழாய், ரிப்பன் அச்சு



**செய்முறை:**

கடலைமாவு, அரிசி மாவு, உப்பு, மிளகாய்த்தூள், சோடாமாவு ஆகியவற்றை ஒன்றாக கலந்து சலித்து வைத்துக்கொள்ளவும்.

தேவையான அளவு நீர் ஊற்றி முறுக்கு மாவு பதத்திற்கு பிசையவும்.

காய்ந்த எண்ணை ஊற்றி மேலும் இலகுவாக பிசையவும்.

(கடினமாக இல்லாமல் பிழிவதற்கு ஏற்றவாரு இலகுவாக இருக்க வேண்டும் அதேசமயம் பிசுபிசுப்பின்றி இருக்கவேண்டும்)

கடாயில் எண்ணை ஊற்றி, காய்ந்ததும் ரிப்பன் அச்சு கொண்டு எண்ணையில் [illegible]கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த எம்.பியாக வேண்டுமா? அவரே தீர்மானிக்க வேண்டும்

## சுசில் தெரிவிப்பு



(கொழும்பு)

**எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளு மன்றம் கலைக்கப்பட்டால் அடுத்த பொதுத்தேர்தலில், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் நாம் போட்டியிடுவோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப் பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியின் தலைவரா வார். அதனடிப்படை யில் சுதந்திரக் கட்சியை அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்காக அவர் செயற்படு வார் என்றும் பிரேமஜயந்த நம்பி க்கை வெளியிட்டார்.

அடுத்த நாடாளுமன்ற தேர்த லில். தான் போட்டியிடுவதா? இல் லையா? என்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிக்க வேண்டும். அவ்வாறான கோரிக் கையொன்று முன்வைக்கப்படு மாயின் அது தொட ர்பில் கலந் தாராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டு தடவைகள் ஜனா திபதியாக இருந்த முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராவதா? இல்லையா? என் பது தொடர்பில் அவரே தீர்மானிக்க வேண்டும் என்றும் பிரேம ஜயந்த எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை.ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளில் நான்கு கட்சிகள் இன்று 18 ஆம் திகதி புதன்கிழமை நுகேகொடை யில் நடத்தவிருக்கின்ற கூட்டம் தனிப்பட்ட இலாப நோக்கம் கொண் டது என்று தெரிவித்த சுசில் பிரேம ஜய ந்த. அக்கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுத ந்திரக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்ப டவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் பல பங்கேற்காது என்று தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# தரக்குறைவான டீசலை திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-பாலித

(கொழும்பு)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 30 ஆயிரம் மெற்றிக் தொன் தரக்குறைவான டீசல் மீண்டும் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மின்வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டீசல் தொகையே நேற்று திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுத்திகரிப்பின் போது குறித்த டீசல் தரக்குறைவானதென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டதாக பாலித ரங்கே பண்டார மேலும் தெரிவித்தார். (இ-3)

# இந்தியா ஒன் அரைவல் விசா வழங்கத் தீர்மானம்

இலங்கைப் பிரஜைகளுக்கு. இந்தியா ஒன் அரைவல் விசா வழங்கத் தீர்மானித்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநா டுகளின் பிரஜைகளுக்கு இந்தியா. ஒன் அரைவல் விசா வழங்கி வருகின்றது.

எனினும். இந்த நாடுகளின் பட்டியலில் இதுவரையில் இல ங்கை இடம்பிடிக்கவில்லை.

அல்கொய்தா. தலிபான் போன்ற தீவிரவாதிகள் இலங்கையைக் களமாகப் பயன்படுத்தி இந்தியா விற்குள் ஊடுருவிவிடக் கூடுமெ ன்ற அச்சம் காரணமாக இவ்வாறு இலங்கையர்களுக்கு ஒன் அரை வல் விசா வழங்கப்படவில்லை.

புதிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் இந்திய விஜயத் திற்கு சமாந்திரமாக இவ்வாறு இலங்கையர்களுக்கு ஒன் அரை வல் விசா வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இலங்கையர்கள் முன்கூட்டியே விசா பெற்றுக்கொள்ளாது. இந் திய விமான நிலையத்தில் விசாவை பெற்றுக்கொள்ள முடியும்.

முதற்கட்டமாக அரசாங்க அதிகாரிகளுக்கு இந்தியா ஒன் அரைவல் விசா வழங்கவுள்ளது.

அடுத்த கட்டமாக அனைத்து இலங்கையர்களுக்கும் விசா வழங்கப்பட உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. (இ-3)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 286

அனுசா அனு




கம்சா மோகனதாஸ்




ஸ்ரீனு ஸ்ரீனுஜா




பிரவின் தாஸ்




சுஜித் கெவின்




சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாகரிகமாக நடந்த 10 பேருக்கு அபராதம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மதுபோதையில் வீதியில் நின்று பொதுமக்களுடன் அநாகரிகமாக நடந்து கொண்ட 10 பேருக்கு தலா 3ஆயிரம் ரூபா அபராதம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்கரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தர விட்டுள்ளார்.மானிப்பாய் பொலிஸாரால், கடந்த வாரம் வெவ்வேறு தினங்களில் கைதுசெய்யப்பட்ட நபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு அந்நபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றவாளிகள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்து இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(இ-3)






## பிக்கப்ரக வாகனம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பொது நிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூரியவை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது பிரதேச சபைக்கான தேவைகள் மற்றம் தற்போதைய நிலை தொடர்பில் எடுத்து கூறியதுடன் வலி மேற்குப் பிரதேச சபையின் தேவைகளுக்கு பயன்படுத்தத்தக்கதாக திண்மக் கழிவு அகற்றக்கூடிய வாகன வசதிகள் மற்றும் மலக்கழிவு அகற்றக்கூடிய வாகனங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதே வேளை உத்தியோகத்தர்கள் வேலைத் திட்டங்களை ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்ளத்தக்கதான பிக்கப்ரக வாகனத்தினையும் வழங்கி உதவுமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(இ-3)

◆◆◆◆◆◆◆◆

## க.பொ.த.(சா/த) செய்முறைப் பரீட்சை

2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இடம்பெற்ற க.பொ.த.(சா/து) பரீட்சைக்குரிய செயன்முறைப் பரீட்சையானது பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதியில் இருந்து இடம்பெறும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் தொலைநகல் 011 278 4422 இலக்கம் உடனோ அல்லது வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணத்தினூடாகத் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ

◆◆◆◆◆◆◆◆

## க.பொ.த.(உ/த)-2015 விண்ணப்பித்தல்

க.பொ.த.(உ/து) 2015 பரீட்சைக்குரிய விண்ணப்ப திகதி முடிவுத்தினம் மார்ச் 05 ஆம் திகதி ஆகும். விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்குரிய முடிவுத்தினம் மார்ச் 10 ஆம் திகதி ஆகும். விசேட தேவையுடைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் விசேட தேவையுடையோர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் பின்னர் பாடங்களை மாற்றித் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்கும் போது ஒப்படை வேலைகளுக்கு மாகாணத் திணைக்களத்தில் பதிவுசெய்வதுடன் கட்டாயமாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கும் பரீட்சைக்கென விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# கல்லுண்டாயில் கழிவு கொட்டுவதை நிறுத்தக் கோரி மீண்டும் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**கல்லுண்டாயில் கொட்டப்பட்ட கழிவுகளினை உடனடியாக அகற்றக்கோரியும் கொட்டுவதனை நிரந்தரமாக நிறுத்தக் கோரியும் பொது மக்கள் மீண்டும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். உப்புக் கொழிக்கும் கடலோரம் உனக்கு பிணம் போடும் சுடுகாடா என்ற கோஷத்துடன் நேற்று காலை 9 மணியளவில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.**



கல்லுண்டாய் கடலோரத்தில் யாழ். மாநகர சபை உட்பட உள்ளூராட்சி மன்றங்களும் குப்பைகள் கொட்டப்படுவதனால் ஆனைக்கோட்டை, நவாலி, கல்லுண்டாய் மக்கள் பெரும் பாதிப்பினை எதிர் நோக்கியிருந்தனர். இவ்வாறு குப்பைகள் ,கழிவுகள் கொட்டப்படுவதனை நிறுத்தக்கோரி பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த 15ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட் டிருந்தனர்.

மக்கள் இவ்ஆர்ப்பாட்டத்திற்கு எவ்வித முடிவுகளும் உரிய தரப்பினரால் வழங்கப்படாத போதிலும் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் இங்கு குப்பை கொட்டுவதனை நிறுத்த முடியாது எனவும் நீதிமன்று உத்தரவிட்டால் மாத்திரமே நிறுத்துவோம் எனவும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினமும் தமது போராட்டத்தினை மீண்டும் ஆரம்பித்த மக்கள் சுன்னாகத்தினைப் போல் எமது பிரதேசத்தினையும் மாசுபடுத்தாதீர்கள் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கழிவு ஒயிலினால் சுன்னாகம் மலக்கழிவால் எமது கிராமம்,உப்பு கொழிக்கும் கடலோரம் உனக்கு பிணம் போடும் சுடுகாடா? எங்கள் கால்நடைகள் மேய்வது சுப்பிரமணியம் பூங்காவா? ஆணையாளரே வாழ்வாதாரப் பிரச்சினையை அரசியல் ஆக்காதீர்கள், எங்கள் முதலமைச்சரே எங்கள் கிராமத்தை காப்பாற்றுங்கள், மகளிர் விவகார பிரதியமைச்சரே எங்களிற்கு தீர்வு தாரும் என எழுதப்பட்ட பதாகைகளினை ஏந்தியிருந்தனர்.

நியாயம் கேட்டால் நீதிமன்றம் ஊடாக பெற்றுக் கொள்ளுங்கள் என பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறுகிறார்கள் சிலர் ஆட்களோடு வந்து மிரட்டுகிறார்கள்.

நாங்கள் செத்தாலும் பரவாயில்லை என்று நினைக்கின்றார்களா இந்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் என வெறுப்புடன் அம்மக்கள் தெரிவித்தனர். மேலும் இதற்கு ஓரிரு வாரங்களிற்குள் நிரந்தரத் தீர்வு ஏற்படாவிட்டால் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்போம் என அம் மக்கள் எச்சரித்துள்ளனர்.இதேவேளை நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போது பொலிஸ் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றியீட்டியதைத் தொடர்ந்து யாழ்.எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இ.சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் கல்வியங்காடு சந்திக்கு அண்மையிலுள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்பாக வெடிகொழுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.எம்.ஜி.ஆருக்கு தனது சொந்தச் செலவில் கல்வியங்காடு செங்குந்தா சந்தை வளாகத்தில் சிலையமைத்து அவரது சிரார்த்த தினம், பிறந்த தின நிகழ்வு என்பவற்றை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்இலவசமாக நடத்தும் க.பொ.த (சா/து) செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றும் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனையுடன் கூடிய செயன்முறைச் செயற்பாடுகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று புதன்கிழமை முதல் ஒருவரை காலத்திற்கு பி.ப 4 மணி முதல் பி.ப 5.30 மணி வரை யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

◆◆◆◆◆◆◆◆

## குணமாக்கல் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியா சாளக்குடி டிவைன் தியான இல்லத்திலிருந்து வருகை தரும் அருட்தந்தை ச.அன்புராசா, சகோ. ஜோஸ் சாஜ் ஆகியோரால் யாழ். மறைமாவட்டத்தில் தியானங்களும் குணமாக்கல் வழிபாடுகளும் நடத்த ப்படவுள்ளன.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை யாழ். இறைதியான இல்லத்திலும் 20,21,22 ஆம் திகதிகளில் பி.ப 4.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் 22 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 12 மணிவரை பண்டத்தரிப்பு தூய பத்திமா அன்னை திருத்தலத்திலும் இடம்பெறவுள்ளன. (இ-3)

◆◆◆◆◆◆◆◆

## மணிவிழா

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் அ.கைலாயபிள்ளைக்கு பாடசாலை சமூகத்தினரால் நடத்தப்படவுள்ள மணிவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாணசபை அமைச்சர் த.குருகுலராசா, உறுப்பினர் ப.அரியரத்தினம், கே.சயந்தன் மற்றும் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களான க.கந்தசாமி, கா.குகபாலன், ப.புஸ்பரட்ணம் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கவுள்ளனர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை உப அதிபர் ச.லலீசன் நினைவு மலரினை வெளியிட்டுவைக்கவுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் வழங்கப்பட்ட வேலைவாய்ப்பில் கூட தமிழர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டனர்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சு பதவி மு.கா. கைகளில் உள்ளது, அதனால் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பு சில வேலைத்திட்டங்களை செய்யவேண்டியுள்ளது. இதன் காரணமாக நாங்களும் இந்த கிழக்கு மாகாணசபையில் இணைந்து ஆட்சி அதிகாரத்தை செய்யவேண்டிய நிலையிலுள்ளோம் என கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இதன்போது நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்தகாலத்தில் கிழக்கு மாகாணசபையில் வழங்கப்பட்ட வேலைவாய்ப்பில் தமிழர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டார்கள். பாடசாலை சிற்றூழியர் நியமனங்களில் கூட, தமிழ் இளைஞர்கள் முற்றுமுழுதாக புறக்கணிக்கப்பட்டு வேறு இனம் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தமை நாம் அனைவரும் அறிந்த உண்மை.

குறிப்பாக, படுவான்கரை பகுதியிலிருக்கும் பாடசாலைகளுக்கு, அம்பாறையிலிருக்கும் (சம்மாந்துறை, நிந்தவூர்) முஸ்லிம் இளைஞர்களுக்கு நியமனங்களை வழங்கி வேலைக்கு அமர்த்திய கசப்பான சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றமை தமிழ் மக்களுடைய இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறான நிலைமைகளை தொடர்ந்து அனுமதிக்க முடியாது. இதனை தடுக்க வேண்டிய தார்மீகக் கடமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. கிழக்கு மாகாணத்தில் அதிகூடிய 11 ஆசனங்களை பெற்றவர்கள் நாங்கள். அந்த வகையில் முதலமைச்சர் பதவியை பெறவேண்டியவர்களும் நாங்களே.

இருந்தபோதும், முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களைப் பெற்று முதலமைச்சு பதவியை திட்டமிட்டு தன்வசப்படுத்தியுள்ளது. கிழக்கு மாகாண தமிழ் மக்களின் எதிர்கால நலன் கருதி நாங்கள் அவர்களுடன் இணைந்து, இரண்டு அமைச்சுகளையும், ஒரு பிரதி தவிசாளர் பதவியையும் ஏற்பதற்கு இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## 30 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் திருப்பி அனுப்பப்பட்டது

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 30 ஆயிரம் மெற்றிக் தொன் தரக்குறைவான டீசல் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றிடம் கொள்வனவு செய்யப்பட்ட டீசல் தொகையே நேற்று முன்தினம் திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் தெரிவித்தார். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளால் சுத்திகரிப்பின் போது குறித்த டீசல் தரக்குறைவானதென உறுதி செய்யப்பட்டதாக பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். (இ-5)

## ஹோம மஹாயக்ஞம்

உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் திரவிய அபிஷேக ஸ்கந்த ஹோம மஹாயக்ஞம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உசன் கந்தசுவாமி கோவில் பிரதமகுரு குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (இ-3)

# பெரும்போக நெல்லிற்கு அரசு விலை நிர்ணயம்

(கொழும்பு)

இம்முறை பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லினை நிர்ணய விலையில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் ஒரு கிலோ நாட்டரசி நெல் 40 ரூபாவாகவும், சம்பா மற்றும் கீரி சம்பா நெல் 50 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா கூறியுள்ளார்.

இரண்டு இலட்சம் மெற்றிக் தொன் நெல்லினை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக உணவு பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை தொடக்கம் அனைத்து நெல் களஞ்சியசாலைகளிலும் நெல் கொள்ளவனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நெல் கொள்வனவு நடவடிக்கையினை அமைச்சு நேரடியாக கண்காணிக்கும் எனவும் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

வாழ்க்கையில் வெறுப்பா?
பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(சி-9913)
கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

# அடையாள அட்டை; நடமாடும் சேவை

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை நடைபெறவுள்ளது. அடையாள அட்டை விண்ணப்பம் அனுப்புவதற்கான பிறப்புச்சான்றிதழ், விவாகப்பத்திரம்,பொலிஸ் அறிக்கை, சத்தியக்கடதாசி, புகைப்படம் , முத்திரை போன்ற ஆவணங்களுடன் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 47 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4117 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 73 1/2<br>உயரம்: 161cm<br>தகைமை/தொழில்: BSC/ வங்கியாளர்<br>தொ.இ: G/4119 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 55 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4118 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 48 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L/ ஆசிரியர், வளவாளர்<br>தொ.இ: G/4120 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 11 செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC, ICT<br>பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/4122 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 21 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4121 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 4 1/2 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'6"தகைமை/தொழில்: MSC/ பொறியியளாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/4124 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 48 செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/4123 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா

நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் க. ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரமத விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. சிவானந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



கலாபூஷணம் வெ.கெங்காதரன் ஆச்சாரியார்

71 ஆவது அகவை தினத்தில்
உமை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
உலோகச் சக்கரவர்த்தியாய்
உம் புகழ் உலகெங்கும் பரவிட
இந்நந்நாளில் – நீர்
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சபையில் மு.காவுடன் இணைய முடிவு!

## த.தே.கூ.அறிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து கிழக்கு மாகாண சபை ஆட்சியில் பங்கேற்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் மாகாண சபையின் இரண்டு அமைச்சுப் பதவிகளையும் உப தவிசாளர் பதவியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

எனினும் எந்தெந்த அமைச்சு பதவிகளை ஏற்றுக்கொள்வது என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று மாகாண சபையில் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் குழுத்தலைவர் எஸ்.தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே தலைவர் சம்பந்தனால் அமைக்கப்பட்ட ஐவரைக் கொண்ட குழு, கொழும்பில் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந்த இணக்கத்துக்கு வந்துள்ளதாக தண்டாயுதபாணி தெரிவித்தார்.

இந்தநிலையில் மூன்றாவது கூட்டம் பெரும்பாலும் திருகோணமலையில் அதில் அமைச்சுக்கள் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் பதவியை கொண்டு முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் ஒற்றுமையுடன் இணங்கிச் செல்வதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக தண்டாயுதபாணி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வீதி விபத்தில் சிக்கி இரு இளைஞர்கள் பலி!

கேகாலை-அவிசாவளை வீதியில் ஹதமுனேவத்த பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். முச்சக்கரவண்டி ஒன்றும் வான் ஒன்றும் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் 17 வயது மற்றும் 23 வயதுடைய இளைஞர்களே உயிரிழந்தவர்களாவர். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# பேசும் படம் - 28

மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் இதயம் கீறி அம்பு விட்ட காட்சி.



உன் காதலை ஊரே சிரிக்குதே என்று சொல்லுறது இதுதானோ?

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி, இல.03, 2-ம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். அல்லது நேரில்.

# தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு காலக்கெடுவிற்குள் தீர்வு

## ஜி.கே.வலியுறுத்து

(கொழும்பு)—

**மத்திய அரசு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு காலக்கெடுவிற்குள் நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்.

இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையே நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது. மேலும் இரு நாடுகளுக்கும் இடையே வேளாண்மை, சுகாதாரம் தொடர்பாக செயற்றிட்டங்களும், இரு நாட்டு மீனவர்களும் பேச்சு வார்த்தை நடத்த இருப்பதாகவும் அதிகார பூர்வமாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

இந்தியா, இலங்கை இடையே நிரந்தர தீர்வு ஏற்படாத பல்வேறு முக்கிய பிரச்சினைகள் இன்னும் நிலுவையில் உள்ளது. குறிப்பாக இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சிங்கள மக்களுக்கு இணையான சம உரிமை, சம அந்தஸ்து வழங்கும் 13 ஆவது அரசியல் சட்ட திருத்தம், கடந்த போரில் நிகழ்ந்த மனித உரிமை மீறல் குறித்த விசாரணைக்கு உட்படாமல் இருப்பது, இலங்கையில் தமிழர் வாழும் பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறாமல் இருப்பது, கச்சதீவு போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து முன்னுரிமை அளித்து நிரந்தர தீர்வுகாண வேண்டும். இலங்கை வாழ் தமிழர்களின் எண்ணங்களையும், தமிழக மக்களின் உணர்வுகளையும் மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு உணர்ந்து இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தையின் செயற்றிட்டங்களை ஒரு காலக்கெடுவிற்குள் நிறைவேற்ற இலங்கை அரசை இந்தியா தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்.பெனின்சுலா றோட்டறக்ட் கழகத்தினால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கிடையே மென்பந்து சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

றோட்டறக்ட் கழகத்தின் முன்னேற்ற மாதத்தினை முன்னிட்டு நல்லூர் றோட்டறிக் கழக அனுசரணையுடன் யாழ்.பெனின்சுலா றோட்டறக்ட் கழகமானது அணிக்கு 7பேர் கொண்ட வங்கிகளுக்கும் நிதிக்கம்பனிகளுக்குமிடையிலான மென்பந்து சுற்றுப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியும் 8 ஆம் திகதியும் அரியாலை காசிப்பிள்ளை ஞாபகார்த்த மைதானத்தில் காலை 9 மணி முதல் ஆரம்பமாகும்.

இந்த சுற்றுத்தொடரினை யாழ். பெனின்சுலா றோட்டறக்ட் கழகமானது இரண்டாவது முறையாக நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தரமற்ற எரிபொருள் விநியோகிக்கும் நிறுவனங்களிடம் அபராதம் அறவிடவும்

தரமற்ற எரிபொருளை விநியோகிக்கும் நிறுவனங்களிடம் அபராதம் அறவிடும் நடைமுறை அவசியம் என பெற்றோலிய தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. அபராதம் அறவிடப்படாமை, தொடர்ந்தும் தரமற்ற எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகின்றமைக்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது என தேசிய ஊழியர் சங்கத்தின், எரிபொருள் கிளையின் செயலாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார். உரிய தரத்தைக் கொண்டிராத 30 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுடன் வந்துள்ள கப்பல் தொடர்பான தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை குறித்த எரிபொருளை இறக்குமதி செய்துள்ள நிறுவனம், அதற்குப் பதிலாக தரமான எரிபொருளை மீண்டும் கொண்டுவரவுள்ளதால் அபராதம் அறவிடுவதற்கான தேவை காணப்படவில்லை என மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுரேன் பலகொட தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 300 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்தது!

## 9 பேர் பலி; பலர் படுகாயம்

மத்திய பிரதேசத்தில் பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 பெண்கள் உட்பட 9 பேர் பலியாகினர். 29 பேர் படுகாயமடைந்தனர். மத்திய பிரதேசம் மாநிலம் தர் மாவட்டத்தில் மச்சாலியா கட் பகுதியில் நேற்று முன்தினம் 10 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. இது குறித்து தர் மாவட்ட பொலிஸ் எஸ்.பி. கூறும்போது, விபத்துக்குள்ளான பேருந்து மத்திய பிரதேசம் மாநிலம் இந்தூரில் இருந்து ராஜஸ்தான் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இரவு 10 மணியளவில் பேருந்து மச்சாலியா கட் பகுதியில் வந்து கொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி 300 அடி பள்ளத்துக்குள் விழுந்துள்ளது. சம்பவம் குறித்த தகவல் கிடைத்தது. தர், ஜபுவா மாவட்டங்களில் இருந்து மீட்புக்குழுக்கள் விரைந்தன. 50 பொலிஸார் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

முதல்வர் இரங்கல்

பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள மகாராஷ்டிர முதல்வர், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா இழப்பீடும் காயமடைந்தவர்களுக்கு தலா 50ஆயிரம் ரூபா நிவாரணத் தொகையும் வழங்க உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# ஓட்டமாவடி கோறளைப்பற்று பிரதேசத்தில் மட்டும் 42 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2015 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி வரை டெங்கு நோயினால் சிறுவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 42 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ரீ.அச்சுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் பெய்த அடை மழையைத் தொடர்ந்து தற்போழுது பெய்து வரும் மழை [illegible] அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பிறைந்துரைச்சேனை கிராம சேவகர் பிரிவிலேயே 2015 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பெப்ரவரி 16ஆம் திகதி வரை அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் ஆரம்பம் முதல் தற்போது வரை ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை வைத்திருந்த குற்றத்திற்காக 18 பேருக்கு எதிராக வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் பிரதேசத்தில் உள்ள பிரதேச சபை, பொலிஸார், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புக்கள் என்பவற்றின் உதவியுடன் பிரதேசத்தில் டெங்கு நுளம்பின் பெருக்கத்தினை குறைக்கும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருவதாக ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ். நௌபர் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயலாமையுடைய வாக்காளர் ஒருவர் உதவியாளரை அழைத்துச் செல்லலாம்

## விதிமுறைகளை அறிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகள் தேர்தலில் வலிமையிழப்பொன்றிற்கு இலக்காகிய வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒரு வரை உடனழைத்துச் செல்வதற்கு தேவையான சட்டவிதிகள் உண்டு என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.




இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இதற்கமைய உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.

அதேபோன்று அத்தேர்தலில் அரசியற் கட்சியொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவரொருவராகவோ செயற்படுகின்றவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான விண்ணப்பப்படிவங்களை தேர்தல்கள் நடத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் அதிகார எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். உரிய தகுதிச் சான்றிதழின் படிவத்தைத் தேர்தல்கள் திணைக்களத்தின் www.slelections.gov.lk பெற்றுக் கொள்ளலாம்.

பார்வைக் குறைபாடுள்ள அல்லது வேறேனும் உடல்ரீதியான வலிமையிழப்பிற்குள்ளாகிய நபர் கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப்படிவமொன்றைப் பெற்று அதனை பூரணப்படுத்தி கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதோடு அதன் பின்னர் அச் சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரொருவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் ப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை, அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனுமோர் அடையாள அட்டை மற்றும் இத்தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக் கொண்டு உதவியாளருடன் வாக்களிப்புக்கு செல்ல வேண்டும்.

வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக,உதவியாளரோடுவாக்காளர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

வாக்களிப்பு பணியாட்குழுவி னரில் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவ லர் மற்றும் பணியாட்குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச் சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப்பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருவதற்கு இயலாத வாக்காளரொருவருக்குத் தேவைப்படின் அதற்கு முந்திய வாக்களிப்புக்களில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தனது வாக்குச்சீட்டினை அடையாள மிட்டுக்கொள்ள அவகாசமுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## பத்து பிரதேச சபைகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டன

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தின் கீழுள்ள 10 பிரதேச சபைகளுக்கு பொது நிர்வாக மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சர் கருஜெய சூரியவினால் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் வைத்து நேற்று முன்தினம் 10 டபிள் பிக்கப் வாகனங்கள் அந்தந்த பிரதேச சபைகளின் தவிசாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதில் மாந்தை கிழக்கு, துணுக்காய், பூநகரி, வவுனியா வடக்கு, செட்டிகுளம், மாந்தை மேற்கு, பருத்தித்துறை, நெடுந்தீவு, காரைநகர், வலிகாமம் வடக்கு ஆகிய 10 பிரதேச சபைகளுக்கு தலா 63 இலட்சம் பெறுமதியான டபிள் பிக்கப் வாகணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், வடமாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஐந்து மாவட்டங்களின் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (அ-2-15)




முல்லைத்தீவு கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று வருகின்ற மாணவி உதயகுமார் தர்சினியின் இருதய சத்திர சிகிச்சைக்காக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் 35 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டது. இந் நிதியானது பிரான்ஸ் வாழ் அன்பர் ஒருவரினால் வழங்கப்பட்டது.

## வன்னியில் சிவராத்திரி நிகழ்வு பக்தி பூர்வமாக அனுஷ்டிப்பு

(மல்லாவி)

துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள இந்து ஆலயங்களில் பக்தர்கள் முக்கியத்துவம் வாய்ந்த விரதமான சிவராத்திரி விரதத்தை பக்தி பூர்வமாக அனுஷ்டித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மல்லாவி பிரிவிலுள்ள மல்லாவி சிவன் ஆலயத்திலும் மற்றும் இந்து ஆலயங்கள் உட்பட பக்தர்கள் தமது வீடுகளிலும் சிவபுராணம் ஓதி நான்கு சாமப் பூசை களையும் பல்வேறு அர்ச்சனைப்பொருட்களையும் கொண்டு சிவனுக்கு பூசை செய்து சிவராத்திரியை அனுஷ்டித் துள்ளனர்.

இதேவேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள வன்னியின் கடைசி மன்னன் பண்டார வன்னியனின் வழிபாட்டு தலமாக இருந்த வவுனிக்குளம் சிவ ஆலயத்திலும் மற்றும் பனங்காமம் பிரதேசத்தில் அமைந்துள்ள சிவ ஆலயம் உட்பட ஏனைய இந்து ஆலயங்களில் பக்தர்கள் பகல் பொழுதில் சிவபுராணங்களைக் கூறியும் இரவுப் பொழுதில் பஞ்சாட்சர செபம் செய்து நான்கு சாமமும் பூசை வழிபாடுகளை செய்து சிவராத்திரி விழாவை அனுஷ்டித்துள்ளனர்.

நோயாளிகள் மற்றும் வயோதிபர்கள் லிங்கோற்சவ காலம் வரை (நள்ளிரவு 12 மணி வரை)சிவனை நினைத்து வழிபாடு செய்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் சிவராத்திரி நிகழ்வுகள் சிவ பக்தர்களினால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. (அ-2-15)

## கமக்கார அமைப்புக்களின் பொதுக்கூட்டங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் கமநலசேவை நிலையத்தின் கீழ் இயங்கும் கமக்கார அமைப்புகளின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தில் நடைபெறும்.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் உருத்திரபுரக்குளம் கமக்கார அமைப்பினருக்கு பிற்பகல 2 ம்ணிக்கும் நடைபெறும்.

சிவநகர் கமக்கார அமைப்பினருக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் சித்திவிநாயகர் கமக்கார அமைப்பினருக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும் ஊற்றுப்புலம் கமக்கார அமைப்பினருக்கு அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கும் நடைபெறும்.

புதுமுறிப்பு கமக்கார அமைப்பினருக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜெயந்தி நகர் கமக்கார அமைப்பினருக்கு பிற்பகல் 2 மணிக்கும் நடைபெறும்.

எனவே மேற்படி குறிப்பிட்டுள்ள திகதிகளில் தங்கள் பகுதி விவசாயிகளுக்கு பொதுக்கூட்டத்திற்கு அறிவிப்பதுடன் அமைப்புக்களுடைய கணக்கு விபரங்களை சீர் செய்து கணக்காய்விற்கு உட்படுத்தி நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அதனை சமர்ப்பிக்க வேண் டுமெனவும் உருத்திரபுரம் கமநலசேவை நிலைய பெரும்பாக அலுவலர் அறிவித்துள்ளார். (அ-2-254)

## பேருந்து தரிப்பு நிழற்குடைகளை அமைக்க நடவடிக்கை எடுங்கள்

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் நகரப் பகுதி மற்றும் பனிக்கன்குளம் ஆகிய இடங்களில் பேருந்து தரிப் பிடங்கள் இதுவரை அமைக்கப்படாதுள்ளதால் பேருந்துகளில் பயணிக்கும் மாணவர்கள், வயோதிபர்கள் கர்ப்பிணிப் பெண்கள் உட்பட பல தரப்பட்ட பய ணிகளும் பல்வேறு சிரமங் களை எதிர்கொள்வதாககுற்றம்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம்-முல்லைத்தீவிற்கும் மற்றும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை இணைக்கும் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் இதனூடாக தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர்.

இவ்வாறு பயணிப்பவர்களில் மாங்குளத்தில் இருந்து வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கும் பயணிகளுக்கு பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்படவில்லை.

இதனால் கொளுத்தும் வெயிலிலும் மழை காலங்களிலும் ஒதுங்கி நிற்பதற்குவசதியின்றிகால்கடுக்ககாத்து நின்று பயணிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை மாங்குளத்திலிருந்து மன்னார் மற்றும் முல்லைத்தீவு செல்லும்வீதிகளிலும்வடக்குமாகாண சபையின் போக்குவரத்து அமைச்சினால் அமைக்கப்பட்டு வருகின்ற பேருந்து தரிப்பிடங்களின் வேலைகள் பூரணப் படுத்தப்படாமல் இருப்பதால் பயணிகள் பயன்பெறமுடியாதுள்ளது.

இதேபோல் பனிக்கன்குளம் கிராமத்தில் இருந்து ஏ-9 வீதியூடாக பயணிப்போர் பேருந்து தரிப்பிட நிழற்குடைகள் இன்மையால் பல் வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் அறிவித்துள்ள 50 பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கும் திட்டத்தில் மாங்குளத்திலும் பனிக்கன் குளத்திலும் பேருந்து தரிப்பிடங்களை அமைத்துத் தரவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்



1072

## விடை தேடிய வண்ணத்துப்பூச்சி!



....“பூக்கள் வாடும் போதெல்லாம் சிட்டு கண்கலங்குகிறாள்.

அவை, வாடியதும் எங்கே போகின்றன எனக் கேட்கிறாள்.

உனக்குத் தெரியுமா? என்றான் யாதவ்.

“எனக்கும் தெரியவில்லை.

திரும்பி வரும்போது இதற்கான பதிலோடு வருகிறேன் எனக் கூறி பறந்துசென்றது வண்ணத்துப்பூச்சி.

யாதவ், அது சென்ற திசையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

வண்ணத்துப்பூச்சியின் வருகைக்காக பல நாட்கள் காத்திருந்து, அதனைக் கண்டான்.

இந்த முறை அவனுடன் தங்கை சிட்டுவும் இருந்தாள்.

வா வண்ணத்துப்பூச்சியே, குறிஞ்சி மலரைப் பார்த்தாயா? என்று கேட்டான்.

ஓ, பார்த்தேன் யாதவ்.

உங்களுக்காக ஒரு மலரை எடுத்து வந்திருக்கிறேன்.

இந்த மலர், 12 வருடங்களுக்கு ஒருமுறைதான் பூக்கும் என்றது வண்ணத்துப்பூச்சி.

இந்த அதிசயமலரைக் கொடுத்ததற்கு நன்றி.

நான் கேட்ட கேள்விக்கு விடை கிடைத்ததா? வாடும் பூக்கள் இறந்துபோகின்றனவா? எனக் கேட்டான் யாதவ்.

இல்லை யாதவ்.

இந்த உலகத்தில் எதுவுமே அழிவதில்லையாம்.

ஒன்று, மற்றொன்றாக மாறுகிறதாம். அதோ, வானத்தைப் பார் யாதவ்.

எவ்வளவு நட்சத்திரங்கள் கொட்டிக்கிடக்கின்றன. எனக்கு அந்த நட்சத்திரங்கள் எல்லாம் வானத்தில் உள்ள பூக்களாகத் தோன்றும்.

நான் அந்த வான்பூக்களின் மீது அமர வேண்டும் என்ற ஆசையுடன் பல இரவுகள் உறங்காமல் மேலே மேலே பறந்து செல்வேன்“ என்றது வண்ணத்துப்பூச்சி.

அதில் அமர்ந்தாயா? என்று கேட்டாள் சிட்டு. இல்லை.

அது தொட்டுவிடும் தூரத்தில் இல்லை. பல முறை தோல்வியுடன் திரும்பி இருக்கிறேன்.

குறிஞ்சிப் பூக்கள் இருந்த மலையிலிருந்து பார்க்கும் போது, அந்த வான்பூக்கள் வெகு அருகில் இருப்பதுபோல தோன்றியது.

உடனே, மேல் நோக்கிப் பறந்தேன். ரொம்ப தூரம் பறந்து, களைத்துப்போய் கீழே விழுந்தேன்.

நல்லவேளை, நான் விழுந்தது ஒரு குறிஞ்சி மலரின் மேலே. அந்தக் குறிஞ்சி மலர், எனக்கு தேன் கொடுத்தது.

ஏன் அவ்வளவு தொலைவு பறந்தாய்?' என்று கேட்டது.

வான்பூக்களின் மீது அமர வேண்டும் என்று கூறினேன்.

குறிஞ்சிப்பூ, நாங்களே சில நாட்களில் வான்பூக்களாக மாறி விடுவோம்' என்று சொன்னது.

அதைக் கேட்டு நான் வியப்படைந்தேன் என்றது வண்ணத்துப்பூச்சி. அப்படி என்றால், வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் எல்லாம் பூமியிலிருந்த பூக்கள் தானா? என்று வியந்தாள் சிட்டு.

ஆமாம். இந்த உலகத்தில் அமரும் பூவிலேயே நட்சத்திரத்தைக் காண்பேன் என்றது வண்ணத் துப்பூச்சி. இனிமேல், நானும் பூக் கள் வாடுவதற்காக வருந்த மாட் டேன். வானில் நட்சத்திரங்க ளைப் பார்த்து மகிழ்ச்சி கொள் வேன் என்றாள் சிட்டு. சந்தோஷம் என்றபடி பறந்து சென்றது வண்ணத்துப்பூச்சி.





எதுவும் அழிவது இல்லை. இனிமேல், நானும் வானத்துப் பூக்களை நோக்கிப் போகமாட்டேன். பூமியில் நான்

அது மறையும் வரை, சந்தோஷமாகக் கையசைத்தார்கள் இருவரும்.

(முற்றும்)

## 02.2015 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1229 -புனித உரோம் பேரரசின் மன்னன் இரண்டாம் பிரெடெரிக் எகிப்திய மன்னன் அல்-கமீல் உடன் 10 ஆண்டு போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டான்.
- 1478 -இங்கிலாந்தின் நான்காம் எட்வேர்ட்டிற்கு எதிராக சதி முயற்சியில் இறங்கியதற்காக அவனது சகோதரன் ஜோர்ஜ் (கிளாரன்ஸ் இளவரசன்) தூக்கிலிடப்பட்டான்.
- 1797 -ட்ரினிடாட் பிரித்தானியர்களிடம் வீழ்ந்தது.
- 1832 -இலங்கையின் பல இடங்களில் ஓர் அசாதாரண எரிமீன் (meteor) தோன்றியது.
- 1861 -அலபாமாவில் ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்கு தலைவரானார்.
- 1865 -அமெரிக்க உள்நாட்டுப் போர்: வில்லியம் ஷேர்மன் தலைமையிலான கூட்டுப் படைகள் தென் கரோலினாவின் மாநில அவையைத் தீயிட்டுக் கொழுத்தினர்.
- 1911 -முதலாவது அதிகாரபூர்வமான விமான அஞ்சல் சேவை இந்தியாவில் அலகாபாத்தில் ஆரம்பமானது.
- 1929 -முதற்தடவையாக ஒஸ்கார் விருது அறிவிக்கப்பட்டது.
- 1930 -கிளைட் டொம்பா ஜனவரியில் எடுத்த புகைப் படங்களை ஆராய்கையில் புளூட்டோவைக் கண்டுபிடித்தார்.
- 1932 -சீனக் குடியரசிடமிருந்து மனசூகுவோவின் விடுதலையை ஜப்பான் மன்னர் அறிவித்தார்.
- 1957 - கென்யாவின் போராளித் தலைவர் டெடான் கிமாத்தி பிரித்தானிய குடியேற்ற அரசினால் தூக்கிலிடப்பட்டார்.
- 1959 - நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1965 - சாம்பியா, ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1979 - தெற்கு அல்ஜீரியாவில் சகாரா பாலைவனத் தில் முதற் தடவையாக பனி மழை பெய்தது.

**பிறப்புகள்**

- 1745 - வோல்ட்டா, இத்தாலிய இயற்பியலாளர் (இ. 1827)
- **1836 - ஸ்ரீராமகிருஷ்ணர், இந்தியாவின் ஆன்மீகவாதி (இ. 1886)**
- 1860 - மா. சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை (பி. 1946)
- 1926 - வ. ஐ. சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (இ. 2009)
- 1931 - டொனி மொறிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர்.

**இறப்புகள்**

- 1546 - மாட்டின் லூதர், ஜேர்மனிய சமய சீர்திருத்த வாதி (பி. 1483)
- 1564 - மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய ஓவியர் (பி. 1475)
- 1967 - றொபேட் ஒப்பன்ஹெய்மர், அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் (பி. 1904)

### ஸ்ரீராமகிருஷ்ணர்



ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் 1836 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி குதிராம் - சந்திரமணி தம்பதியினருக்கு மேற்கு வங்காளத்திலுள்ள கமார்புகூர் எனும் சிறிய கிராமத்தில் பிறந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணன் எனப் பரவலாக அறியப்படும் கதாதர் சாட்டர்ஜி 19ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதிகளுள் ஒருவர். இவர் விவேகானந்தரின் குருவாவார். அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ் வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.

சிறு வயதில் ஆடல் பாடல்களிலும், தெய்வங்களின் படங்கள் வரைவதிலும், களிமண்ணில் சிலைகள் செய்வதிலும் ஆர்வமாயிருந்த கதா தருக்கு கணிதம் பிடிக்காத பாடமாய் இருந்தது. கிராமத்தின் செல்லப் பிள்ளையாக அவர் விளங்கினார்.

சற்று வளர்ந்தவுடன் பள்ளிப்படிப்பு பொருள் ஈட்டுவதையே நோக்கமாக கொண்டிருப்பதாக கருதிய அவர் பள்ளி செல்ல மறுத்தார். இயற்கையை ரசிப்பதிலும், பக்திப் பாடல்கள் பாடுவதிலும், புராணக் கதைகள் கேட்பதி லும், நண்பர்களுடன் விளையாடுவதிலும் பொழுதைக் கழித்தார். சிறு வயதிலேயே ஆன்மீக விடயங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவரா யிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தொண்டைப் புற்றுநோய் காரணமாக 1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி உயிர் பிரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...சிறுவனாக இருக்கும் போதே, ரஜினியை திருடர்கள் கடத்திச் சென்று விடுகிறார்கள். அதனால் அவரும் கார் திருடனாக மாறுகிறார். அப்போது சொந்த வீட்டிலேயே திருட நேரிடுகிறது.

தன் கதையை அறிந்து கொள்ளும் ரஜினி, கொள்ளைக் கூட்டத்தினரை பழி வாங்குகிறார். இதில் ரஜினியுடன் இந்தி நடிகை அனிதா ராஜ் ஜோடியாக நடித்தார். சுஹாசினி தங்கையாக நடித்தார். மற்றும் சில்க் சுமிதா, பண்டரிபாய், அருணா இராணி, ஜெய்சங்கர், மேஜர் சுந்தரராஜன், எம்.என். நம்பியார், விஜயகுமார், ராஜேஷ் ஆகியோர் நடித்தனர். ஆர்.தியாகராஜன் டைரக்ட் செய்தார். இந்தி இசை அமைப்பாளர் பப்பி-லஹரி இசை அமைத்தார். 14-4-1983 இல் வெளிவந்த இப்படம் நூறு நாள் ஓடியது.

**சிவப்பு சூரியன்**

மாயா ஆர்ட் நிறுவனத்துக்காக முக்தா பிலிம்ஸ் தயாரித்த படம் சிவப்பு சூரியன். இதை முக்தா சீனிவாசன் டைரக்ட் செய்தார். கதை-வசனம்: செல்வகுமார். வாலியின் பாடல்களுக்கு இசை: எம்.எஸ்.விஸ்வநாதன். ரஜினிகாந்துக்கு ஜோடியாக ராதா நடித்தார். மற்றும் சரிதா, மனோரமா, சில்க் சுமிதா, சிவகாமி, தேங்காய் சீனிவாசன், ஒய்.ஜி.மகேந்திரன், சிவசந்திரன், சங்கிலி முருகன், ராதாரவி ஆகியோரும் நடித்தனர். 27-5-1983இல் வெளிவந்த இப்படமும் நூறு நாள் படமாக அமைந்தது. தெலுங்கிலும் இப்படம் டப் செய்யப்பட்டது. ரஜினிகாந்த் நடித்த முதல் இந்திப்படமான அந்தாகானூன் மகத்தான வெற்றி பெற்றது. தமிழில் வெற்றி மேல் வெற்றி பெற்று, சூப்பர் ஸ்டாராக உயர்ந்த ரஜினிகாந்துக்கு, இந்திப் பட உலகிலிருந்தும் நிறைய அழைப்புகள் வந்தன.

**சட்டம் ஒரு இருட்டறை**



விழா ஒன்றில் ரஜினியும் அமிதாப் பச்சனும்

தமிழில், எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கிய "சட்டம் ஒரு இருட்டறை" மாபெரும் வெற்றி பெற்றது. இதில் கதாநாயகனாக நடித்த விஜயகாந்த், நட்சத்திர அந்தஸ்துக்கு உயர்ந்தார். பெற்றோர்களை படுகொலை செய்த கொடியவர்களை மகன் பழி வாங்குவதுதான் கதை. இந்தி ஷோலே படம் போல, எதிர்பாராத திருப்பங்களும் உள்ளத்தைத் தொடும் சம்பவங்களும் நிறைந்த கதை. இதை எழுதியவர் இயக்குனர் சந்திரசேகரின் மனைவியும், நடிகர் விஜய் தாயாருமான ஷோபா. இந்தக் கதையை இந்தியில் அந்தாகானூன் என்ற பெயரில் படமாக்க, பிரபல பட அதிபர் பூர்ணசந்திரராவ் முடிவு செய்தார். கதாநாயகனாக நடிக்க, ரஜினியை அழைத்தார். தமிழில் நிறைய படங்களில் நடித்துக் கொண்டிருந்தாலும், இந்தப் படம் நிச்சயம் ஹிட் ஆகும் என்று கருதி, திகதி கொடுத்தார், ரஜினி.

**ஹேமமாலினி**

ரஜினிக்கு அக்காவாக, போலீஸ் அதிகாரி வேடத்தில் ஹேமமாலினி நடித்தார். அமிதாப் பச்சன், பிரான், பிரேம் சோப்ரா, டானி, ரீனாராய் ஆகியோரும் இடம் பெற்றனர். ரஜினி, தன் சொந்தக் குரலில் பேசி நடித்தது குறிப்பிடத்தக்கது. ரஜினிக்கு இந்தி அதிகம் தெரியாததால் அவர் டப்பிங் பேசுவதற்கு, டப்பிங் தியேட்டரை 4 நாட்களுக்கு புக் செய்து வைத்திருந்தார்கள். ஆனால், ரஜினி மிக சரளமாக இந்தி பேசி ஒரே நாளில் டப்பிங் வேலைகளை முடித்துக் கொடுத்தார். மசாலா படங்களை டைரக்ட் செய்வதில் மன்னர் என்று பெயர் பெற்றிருந்த ராமாராவ், இப்படத்தை டைரக்ட் செய்தார்.

**50 வாரம்**

ரஜினியின் இந்த முதல் இந்திப் படம் 7-4-1983இல் வெளிவந்து, மெகாஹிட் படமாக அமைந்தது. வடநாட்டில் இப்படம் 50 வாரம் ஓடியது. சென்னையில் 25 வாரம் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது. இந்தப் படத்தைத் தொடர்ந்து, மேலும் பல இந்திப் படங்களில் ரஜினி நடித்தார். அவர் நடித்த இந்திப் படங்களின் எண்ணிக்கை 24. இவை எல்லாமே வெற்றிப்படங்கள். காங்குவா 50 வாரமும், மேரி அதாலத், சாலபாஸ், ஹம், பூல்பனே அங்காரே ஆகிய படங்கள் 25 வாரமும், மற்ற படங்களில் பெரும்பாலானவை நூறு நாட்களுக்கு மேலும் ஓடின.

**அதிசயம்**

தமிழ்நாட்டிலிருந்து வடக்கே போன வைஜயந்திமாலா, ஹேமமாலினி, வஹீதா ரஹ்மான், ஸ்ரீதேவி ஆகியோர் வெற்றி பெற்று ஏராளமான படங்களில் நடித்தனர். கமலஹாசன், **"ஏக் து ஜே கேலியே"** உள்பட சில வெற்றிப் படங்களில் நடித்தார். ஆனால், நடிகைகளை ஏற்றுக்கொண்டது போல் நடிகர்களை இந்திப்பட உலகம் ஏற்றுக் கொள்வதில்லை. நடிகர்கள் அங்கு நிலைத்து நிற்க முடியாமல் திரும்பிவிட்டனர். இதிலும் விதிவிலக்காக, ரஜினிகாந்த் 24 இந்திப் படங்களில் நடித்து சாதனை படைத்தார். கமலஹாசன் நடித்த **ஏக் து ஜே கேலியே** படம் சிறப்பாக அமைந்து, பெரிய வெற்றி பெற்றது.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 81**

...ம்... ம்... ம்ன்னு மொனகுறா. யப்பே யத்தேன்னு பொலம்புறா.

எலும்புக்கும் சதைக்கும் மத்தியில் ஊசியச் செலுத்திச் செலுத்தி உருவுது ஒரு வலி இடுப்புல ஒரு பக்கம் நொழைஞ்ச மறுபக்கமா வெட்டி வெளியேறுது ஒரு மின்னலு.

அய்யான்னு சொரக்குடுக்கைய இறுக்கிப் புடிச்சு இழுத்தவதான்.

அது அந்து தெறிச்சு அங்கிட்டு ஓடி விழுந்து போச்சு.

சொரக்குடுக்க ஓடி வெளிய போயி விழுக படீர்ன்னு ஒடஞ்சதய்யா உள்ளிருந்த பனிக்கொடம்.

இப்ப தீட்டு நின்னு போச்சு .

வழ வழன்னு வடிகஞ்சியா ஒழுகுது பனிக்கொடம் ஒடைஞ்ச தண்ணி.

பச பச பசன்னு பசையப் பாத்தவுடன் வலியில துடிக்கிறவளுக்கு வந்திருச்சு ஒரு நம்பிக்கை.

சாமி எம் பிள்ள வலிக்காம வழுக்கி வழுக்கி வர்றதுக்குத்தான் இந்த வசதி பண்ணி வச்சிருக்கிறியா? கையெடுத்துக் கும்புடனும் ஒன்னிய. ஆனா கைதூக்க முடியலயே.

பனிக்கொடம் ஒடைஞ்சா அதுல நீந்தி வந்திரும்.

பிள்ளங்கிறது நெசந்தான்.

ஆனா வலி குறைஞ்சிரும்கிறது தப்பு.

அதுக்குப் பெறகு எடுக்கும் பாருங்க ஒரு இடுப்பு வலி ஓடிக் கெணத்துல விழுந்து செத்துப் போகலாம்ன்னு தோணுமாம் பொம்பளைகளுக்கு.

இப்ப ஒடைஞ்ச பனிக் கொடத்துக்குள்ள ஊர் சுத்துது பிள்ள.

அப்படித்தான் ரெண்டு நாலு சுத்திச் சுத்தி அழிச்சாட்டியம் பண்ணுமாம். அது எதுக்குன்னா வெளி வாசல் தேடித் தேடி அலையுதாம் கண்ணு தெரியாத புள்ள கருவுக்குள்ள.

கண்ண மூடிக் கிட்டே வழி கண்டு புடிக்குது கருவுக் குள்ள பள்ளபெறந்து வெளியேறிக் கண்ணத் தொறந்தும் வழிகண்டு பிடிக்க முடியல மனுசப்பயபுள்ள.

இதத்தான் ஈசன் எழுத்துன்னு சொல்லி அலையுதுக பெருசுக.

முக்குறா மொனகுறா.



மார்புக்கூட்டுல மூச்சத் தேக்கி தம் கட்டி நிக்கிறா.

வலியடக்கப் பல்லக் கடிக்கிறேன்னு ஒதட்டையும் நாக்கையும் ஒரு ஓரமாக் கடிச்சு ரத்தம் கசிய அனத்துறா.

முதல் சுத்துச் சுத்துது பிள்ள வகுத்துக்குள்ள.

அந்த ஒரே சுத்துல மேல இருந்த பிள்ள கடனுக்குன்னு கீழ எறங்கிருச்சு.

எறங்குன பாரமெல்லாம் எந்தித் தாங்குனதுல இடுப்போட சேத்து இப்ப முட்டிக்காலும் வலிக்குது.

யாத்தேன்னு கத்துறா.

வெளிய விழுந்த ஒரு இடியும் அவளோட சேந்து கதறுது.

இப்ப ரெண்டாம் சுத்துச் சுத்துது பிள்ள.

நெஞ்சுக்கு நேர தலையும் வயித்துக்குள்ள காலுமா நிமிந்திருச்சு இப்பக் கவுந்து கெடந்த பிள்ள.

வலியில உசுரு ஒடம்ப விட்டுக் கொஞ்சம் வெளிய போகுது உள்ள வருது.

கொஞ்சம் வெளிய போகுது உள்ள வருது.

முதுகுப் பின்னால் கெடந்த சாக்க அமுத்தி அமுக்குனது கயிறு அவுந்து பிதுங்கி வழியுது கம்பங்கருது.

நாட்டுக்குத்தலா நின்னா பிள்ள இப்ப மூணாம் சுத்துச் சுத்தி வருது.

எங்க? எங்க? நான் பத்து மாசமாக் குடியிருந்த வீட்டுக்கு வெளிவாசல் எங்க? கையையும் காலையும்ஒதறி ஒதறித் தேடுது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுப்புணர்வுகளை களைந்து செயற்படுமாறு ரணில் அழைப்பு

(கொழும்பு)

**வெறுப்புணர்வுகளை களைந்து செயற்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். மகா சிவராத்திரியை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த அழைப்பை விடுத்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இருளில் இருந்து வெளிச்சத்துக்கு வருவதற்கான நிலையையே சிவராத்திரி உணர்த்துகிறது.

இந்தநிலையில் இலங்கையில் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும் என்று ரணில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் இன்று சகோதரத்துவத்துடனான அரசியல் கலாசாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்து சமூகத்தினரும் இணைந்து வாழும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.. எனவே இதன்போது வெறுப்புணர்வை தவிர்க்க திடசங்கற்பம் பூண வேண்டும் என்று ரணில் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-3)

# உயர்கல்வி அதிகாரிகளின் இழுபறி நிலையால் பல்கலைக்கழக கட்டமைப்பு பாதிக்கப்படும் அபாயம்

(கொழும்பு)

உயர்கல்வி அதிகாரிகளின் இழுபறி நிலையால், பல்கலைக்கழக கட்டமைப்பு மேலும் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனால் அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றம் பின்தள்ளப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் காணப்பட்டதைப் போன்று, தகுதியற்றவர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

இதனால் அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றம் பின்தள்ளப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் காணப்பட்டதைப் போன்று, தகுதியற்றவர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், அதன் உபவேந்தரின் பதவிக காலம் கடந்த 12 ஆம் திகதி நிறைவடைந்த போதிலும், அவர் தொடர்ந்தும் பதவியில் நீடிப்பதாக பேராசிரியர் பிரபாத் ஜயசிங்க தெரிவித்தார்.

வேறு சில பல்கலைக்கழகங்களில் பீடாதிபதியின் பதவிக் காலம் நிறைவடைந்த பின்னர், அந்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்படும் பதில் பீடாதிபதி சுமார் 6 மாதங்கள் பதவியில் நீடிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால் பல்கலைக்கழக கட்டமைப்புக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-3)

# அகதிகள் விவகாரத்தில் அரசின் முடிபு சரியே!

### தமிழக ஆளுநர் தெரிவிப்பு

இலங்கையில், உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படாதிருக்கும் நிலையில் அகதிகளை இலங்கைக்கு அனுப்ப அரசு எதிர்ப்பு தெரிவித்தது சரியானதே என தமிழக ஆளுநர் ரோசய்யா தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைத் தமிழ் அகதிகள் விருப்பத்தின் அடிப்படையில் நாடு திரும்புவது குறித்து, இருதரப்பு பேச்சுவார்த்தைகளைத் தொடங்க மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள், இன நல்லிணக்கம் குறித்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள போதிலும், தற்போது அங்கு நிலவிவரும் பயம் மற்றும் மிரட்டல் நிறைந்த சூழல் தமிழர் வாழும் பகுதிகளில் இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து தங்கிவரும் நிலை் உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படாதிருப்பது புதிய இலங்கை அரசால் திட்டவட்டமான நம்பத்தகுந்த நடவடிக்கைகள் எதுவும் இது வரை எடுக்கப்படாதது போன்ற நிகழ்வுகளைக் கருத்திற் கொள்ளும் போது, இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்புவது குறித்து விவாதிப்பதற்கான கூட்டத்தை நடத்துவதற்கு உகந்த தருணம் இன்னும் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது.

அதனால், இத்தகைய கூட்டம் தள்ளிவைக்கப்பட வேண்டும் என இந்த அரசு உறுதிபடத் தெரிவித்துள்ளது. இலங்கைத் தமிழ் அகதிகள் 5 அமைதியான, நியாயமான முறையில் உரிய மரியாதையுடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதிகொண்டுள்ளது. அகதிகள் தாயகம் திரும்புவதற்கான உகந்த சூழலை உருவாக்கத் தேவையான, போதிய பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறுபான்மைத் தமிழர்களின் சுயாட்சி மற்றும் ஜனநாயக உரிமைகள் முழுமையாக மீட்கப்பட்டு உள்நாட்டிலேயே இடம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே, இங்கு வாழும் அகதிகள் தாயகம் திரும்புவது குறித்து சிந்திக்க வாய்ப்பு ஏற்படும் என்பதே இந்த அரசின் கருத்தாகும் என்றார்.

### மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் தமது வாழ்வாதாரத்திற்காக அமைதியாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்படும் நிகழ்வுகள் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும்.

இலங்கையில் தூக்கு தண்டனையை எதிர்கொண்டிருந்த ஐந்து மீனவர்களை விடுவித்து, அவர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்புவதை உறுதிசெய்திட அம்மீனவர்களின் 6 வழக்குச் செலவுகள், அவர்கள் சிறையில் இருந்தகாலத்தில் அவர்களது குடும்பத்திற்கான வாழ்வாதார உதவி வழங்கியதுடன் அவர்கள் புதிய வாழ்வைத் தொடங்குவதற்கான நிதியுதவியையும் வழங்கி இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகளை நான் மனமார பாராட்டுகின்றேன்.

கச்சதீவு மீதான இந்தியாவின் உரிமையை மீண்டும் நிலைநாட்டி, பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் மீன் பிடிக்கும் உரிமையை நிலைநிறுத்துவதன் மூலமாக மட்டுமே, நமது மீனவர்கள் தொடர்ந்து சந்தித்துவரும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்று தனது நிலைப்பாட்டினை இந்த அரசு மீண்டும் வலியுறுத்துகிறது என ரோசய்யா கூறினார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சடைச்சி

Botanical name- Grewia tilifolia
family- tiliaceae
Sinh- Hamaniya

மரவகையைச் சேர்ந்தது. சாம்பல் கலந்த மண்ணிற பட்டையுடையது. இம்மரத்தின் இளம்வயது பகுதிகள் உரோம அமைப்புடையவை. தனியிலை ஒன்றுவிட்ட இலையமைப்புக் கொண்டது. 6.2-12.5 செ.மீ.நீளமானவை. கோளவடிவ பெரிய இலைகள். இலையின் அடிப்பகுதி இருதய வடிவினதாகும். இலையின் விளிம்புகள் அரிவாள் போன்ற விளிம்புகளையுடையது. இலைக்காம்பு 1.8-2.5 செ.மீ. நீளமானவை. ஒழுங்கான, சிறிய மங்கிய மஞ்சள் நிறமுடைய பூக்களைக் கொண்டது. 2 செ.மீ. நீளமான பழங்கள். 4 பிளவுகளை யுடையது. உரோம அமைப்புக் கொண்டது. சித்திரையிலிருந்து ஆடி மாதம் வரை பூக்களைக் காணலாம்.

வறண்ட பிரதேசங்களிலுள்ள காடுகளில் இதன் பரம்பல் அதிகம் காணப்படும்.

இதன் பட்டை, வேர்ப்பட்டை, இவைகள் அனைத்தும் மருத்துவ குணம்மிக்கவை.

இந்த மூலிகைக்கு குளிர்ச்சியான தன்மையுமுண்டு. அத்துடன் துவர்ப்பான குணமும் உள்ளதால் இதன் இலைகளை பொடுதலை, வெந்தயம் ஆகியவற்றுடன் சேர்ந்து நிழலில் உலர்த்தி பொடித்து சிகைக்காய் தூளிற்கு பதில் தலைக்கு வைத்து முழுகிவர பொடுகு நீங்கி, முடி தாராளமாக வளரும்.

இதன் பட்டை அல்லது வேர்ப்பட்டை ஒரு பங்கு எடுத்து 4 பங்கு குடிநீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை குடிக்க அதிசாரம், இரத்தக் கழிச்சல் நீங்கும்.

இதன் இலைகளையும் வேரையும் மஞ்சிஷ்டி வேரையும் ஒரேயளவாக எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து சல்லடைத்துணியில் அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். முகப்பரு உடையவர்கள் இப்பொடியை இளஞ்சூட்டு நீரில் குழைத்துப்பூசி இளஞ்சூட்டு நீரில் முகம் கழுவிவர முகப்பருக்கள் முற்றாக நீங்கும்.

ஆல், அரசு, அத்தி, இத்தி, நாவல் ஆகியவற்றின் பட்டைகளுடன் இதன் பட்டையையும் ஒரேயளவாகச் சேர்த்து குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை அருந்தினாலும் கழிச்சல், சீதக்கழிச்சல், இரத்தக் கழிச்சல் குறையும்.

**சடைச்சி** எனும் மரத்தைப் பற்றிய முக்கிய குறிப்பு யாதெனில் இந்திய மூலிகை சம்பந்தமான நூல்களில் சடைச்சி மூலிகை மரத்தின் மருத்துவக் குணங்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால் யாழ்ப்பாண சித்த மருத்துவ நூலான பரராஜசேகரம் எனும் நூலில் 18 வகையான தோலில் ஏற்பட்ட குட்ட நோய் களுக்கு பிரதான மருந்தாக **சடைச்சி எண்ணெய்** குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் வடமாகாணக் காடுகளில் சடைச்சியின் பரம்பல் அதிகமாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**சடைச்சி எண்ணெய்**

*ஒவ்வொன்றும் 5 கிராம்*

சடைச்சிவேர், கொடிவேலிவேர், புன்னைவிதை, தகரைவிதை, வசம்பு , கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கார்போலரிசி, கருஞ்சீரகம், மாதாளைவேர், வெள்ளறுகு வேர், புங்கம்விதை, அமிஞ்சில்விதை.

*ஒவ்வொன்றும் ஒரு லீற்றர்*

நல்லெண்ணெய், ஆமணக்கு எண்ணெய், புன்னை எண்ணெய், புங்கெண்ணெய்.

*ஒவ்வொன்றும் ஒரு லீற்றர்*

குப்பிளாய்சாறு, எலுமிச்சம்பழச்சாறு

விட்டு மேற்கூறிய சரக்குகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து கற்கமாக எண்ணெய் சாறுகளை கலந்து அடுப்பேற்றி மெழுகு பதமாக வடித்து எவ்வகையான நாட்பட்ட அல்லது தோலில் ஏற்படும் குட்ட நோய்களுக்கு பூசி வர விரைவில் குணமாகும்.

அடிக்கடி தோலில் ஒவ் வொமையினால் அரிப்பு ஏற்படுபவர்களுக்கு சந்தனக் கட்டை, சடைச்சிவேர், சடைச்சி இலை, கசகசா, எலுமிச்சம் பழத் தோல், கிச்சினிக் கிழங்கு ஆகியவற்றை உலர்த்தி, பொடித்து வைத்துக் கொண்டு குளியல் பொடியாகவும் பயன்படுத்தலாம்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் அனைவரும் அம்மாவின் பக்கமே

## மதுரை ஆதீனம்

ஸ்ரீரங்கம் இடைத்தேர்தல் வெற்றியைப் போலவே 2016ஆம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.கவின் வெற்றி தொடரும் என மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார். நடந்து முடிந்த ஸ்ரீரங்கம் சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றி பெற்றுள்ளது. தி.மு.க. தவிர ஏனைய கட்சிகள் டெபாசிட் இழந்துள்ளன. இந்நிலையில், அ.தி.மு.கவின் வெற்றி தொடர்பாக மதுரை ஆதீனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது, ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் அ.தி.மு.க. மாபெரும் வெற்றி பெற்றது. இதன்மூலம் மக்கள் அனைவரும் அம்மா பக்கமே என்று நிரூபித்து விட்டனர்.

இந்த வெற்றி, வருகிற 2016ஆம ஆண்டு நடைபெறும் பொதுத் தேர்தலிலும் தொடரும். அம்மா என்றால் தாய். எனவே தாயுள்ளத்தோடு மக்கள் அனைவரும் மனநிறைவோடு, மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் அம்மா ஆற்றி வரும் சேவைகள் மக்கள் மனதில் ஆழமாக பதிந்து விட்டன. ஸ்ரீரங்கம் தொகுதி மக்கள அனைவருக்கும் மதுரை ஆதீனத்தின் ஆசிகள்என்றென்றும் உண்டு என்று தெரிவித்துள்ளார். (இ-3)




# ஸ்ரீரங்கம் தொகுதியில் அ.தி.மு.கவே வெற்றி!

ஜெயலலிதா பெற்ற வாக்கு வித்தியாசத்தைவிட இரு மடங்கு வாக்கு வித்தியாசத்தில் வளர்மதி வெற்றிபெற்றுள்ளார்.

ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் எஸ். வளர்மதி 1,51,561 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

தனக்கு அடுத்ததாக வந்த தி.மு.க. வேட்பாளர் என்.ஆனந்தைவிட 96,516 வாக்குகள் அதிகம் பெற்றுள்ளார்.

தி.மு.க. வேட்பாளர் என் .ஆனந் 55,045 வாக்குகளையும் பாரதீய ஜனதாக் கட்சியின் வேட்பாளர் எம்.சுப்ரமணியம் 5,015 வாக்குகளையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் கே. அண்ணாதுரை 1552 வாக்குகளையும் பெற்றுள்ளார்.

சுயேச்சையாகப் போட்டியிட்டவர்களில் டிராபிக் ராமசாமி என்ற சமூக ஆர்வலர் 1167 வாக்குகளை பெற்றுள்ளார்.

யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை என்பதைக் குறிக்கும் நோட்டாவுக்கு 1919 வாக்குகள் விழுந்துள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரைவிட அதிக வாக்குகள் நோட்டாவுக்கு விழுந்துள்ளன.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட 29 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

இதில் தி.மு.கவைத் தவிர, மற்ற அனைத்துக் கட்சிகளும் டெபாசிட் இழந்துள்ளன.

அ.தி.மு.க. இந்த இடைத் தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து, தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. தொண்டர்கள் பட்டாசுகளை வெடித்தும் கோஷங்களை எழுப்பியும் உற்சாகக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

அ.தி.மு.கவின் தலைமையகத்திலும் ஜெயலலிதாவின் இல்லம முன்பாகவும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் குவிந்து வாழ்த்து கோஷங்களை எழுப்பினர்.

### ஜெயலலிதா நன்றி

இந்தத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா நன்றி தெரிவித்துள்ளார்.



அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதையடுத்து, அவர் விடுத்திருக்கும் அறிக்கையில், கேடு மதி கொண்ட அரசியல் எதிரிகள் எத்தனை சூழ்ச்சி செய்தாலும் அவை அத்தனையையும் எதிர்கொண்டு வெற்றி பெறுகின்ற ஆற்றல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முழுமையாக உள்ளது என்பதையே ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் முடிவும், கழக வேட்பாளரின் வாக்கு வித்தியாசமும் உலகுக்கு உணர்த்துகின்றன என்று கூறியுள்ளார்.

கடந்த 13ஆம் திகதியன்று நடந்த ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில், 81.83 சதவீத வாக்குகள் பதிவாயின.

### எதிர்பார்த்த முடிவு எதிர்க்கட்சிகள்

இந்த இடைத் தேர்தலில் அ.இ. அ.தி.மு.க. வேட்பாளர் வளர்மதி வெற்றிபெற்றிருக்கும் நிலையில், எதிர்க்கட்சிகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன.

இடைத்தேர்தல் முடிபு குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்திருக்கும் பா.ம.க நிறுவநர் ராமதாஸ், யார் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது. அவர்களே நின்றார்கள்.. அவர்களே நடத்தினார்கள்... அவர்களே வென்றார்கள் என்று கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஸ்ரீரங்கம் இடைத தேர்தல ஜனநாயகத்தின்படியோ, சட்டத்தின்படியோ உண்மையான தேர்தலாக இருக்காது என்கிற காரணத்தால்தான் காங்கிரஸ் கட்சி போட்டியிடுவதிலிருந்து விலகியது. இன்றைக்கு வருகிற வாக்கு வித்தியாசத்தைப் பார்த்தால் எங் கள் நிலை நியாயமானது என்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது என்று கூறியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கம் தொகுதியில் மொத்த வாக்காளர்கள் 2,20,962. தற்போது 2015 இல் மொத்த வாக்காளர்கள் 2,70,281. ஏறத்தாழ 50 ஆயிரம் வாக்காளர்கள் திடீரென்று எப்படி முளைத்தார்கள் என்றும் இளங்கோவன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்த இடைத்தேர்தலில் பண நாயகம் வெற்றிபெற்றிருப்பதாக, பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

2011 ஜெயலலிதா இந்தத் தொகுதியில் வெற்றிபெற்றபோது கிடைத்த வாக்கு வித்தியாசத்தைப் போல இரு மடங்கு வாக்கு வித்தியாசத்தில் தற்போது அ.தி.மு.க. வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார்.

2011ஆம் ஆண்டில் அ.தி.மு.க. வேட்பாளர் ஜெயலலிதா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் என்.ஆனந்தை விட 41,848 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட ஜெயலலிதா மொத்தம் 1,05,328 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் என்.ஆனந்த் மொத்தம் 63,480 வாக்குகள் பெற்றார்.

ஆனால் தற்போது, 96 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வளர்மதி வெற்றி பெற்றிருக்கிறார். வெற்றி வாக்கு வித்தியாசத்தில் 10ஆவது சுற்றிலேயே ஜெயலலிதாவை முந்திவிட்டார் வளர்மதி.

2011ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் ஸ்ரீரங்கம் தொகுதியில் வெற்றிபெற்ற ஜெயலலிதா, சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றதால் தனது பதவியை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# திருச்சி விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுப்பு

(திருச்சி)

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தினமும் 12இற்கும் மேற்பட்ட விமானங்கள் இயக்கப்படுகின்றன. இலங்க்கை, மலேசியா, டுபாய், சிங்கப்பூர், கோலாலம்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு விமானங்கள் இங்கிருந்து சென்று வருகின்றன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை விமான நிலைய டெர்மினல் பகுதி மேலாளர் லூக்காஸ் டேவிட்டின் தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. எதிர்முனையில் பேசிய நபர் ஒருவர் விமான நிலையத்தில் வெடிகுண்டு வைத்துள்ளோம். சரியாக காலை 8 மணிக்கு குண்டு வெடிக்கும் என கூறியுள்ளார்.

அதிகாலை 4.55 மணிக்கு வந்த இந்த தகவலால் டெர்மினல் மேலாளர் டேவிட் லூக்காஸ் அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து திருச்சி மாநக்ர பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். விமான நிலைய இன்ஸ்பெக்டர் ரமேஷ், வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி ராஜமாணிக்கம் மற்றும் பொலிஸார் விமான நிலையத்திற்கு விரைந்து சென்றனர். மோப்ப நாய் லிலியும் கொண்டுவரப்பட்டது.

மத்திய பாதுகாப்பு படை பொலிஸார் 5 மோப்ப நாய்களுடன் விமான நிலையம் முழுவதும் சல்லடை போட்டு வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டுள்ளதா என தேடினர். திருச்சி விமான நிலைய பொலிஸார் நிலையத்தின் வெளிப் பகுதியில் உள்ள வாகனம் நிறுத்தும் இடங்கள், பூந்தொட்டிகள், கடைகள் ஆகிய இடங்களில் மெட்டல் டிடெக்டர் மூலம் வெடிகுண்டு ஏதும் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதா என தேடினர். நேற்று காலை விமான நிலையத்திற்கு வந்த பயணிகளின் உடைமைகளும்வாகனங்களும்தீவிர சோதனை செய்யப்பட்டன.

அதே போன்று வெளிநாடுகளில் இருந்து வந்த பயணிகளின் உடைமைகளும் மெட்டல் டிடெக்டர் மூலம் தீவிர சோதனை செய்யப்பட்டன. காலை 9 மணி வரை இந்த சோதனை நடந்தது. 6 மோப்ப நாய்களுடன் மத்திய பாதுகாப்பு பொலிஸார், மாநகர பொலிஸார் மெட்டல் டிடெக்டர் கருவியுடன் ஆங்காங்கே வேகவேகமாக சென்று சோதனை செய்ததால் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (இ-3)




# சமூக வலைத்தளங்கள் ஊடாக சிறுநீரக விற்பனை கண்டுபிடிப்பு

சமூக வலைத்தளங்களுக்கு ஊடாக சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத நடவடிக்கை ஒன்றை இந்திய ஐதராபாத் பொலிஸார் நேற்று முன்தினம் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது பொலிஸார் 9 கடவுச்சீட்டுகளையும் இரண்டு மடிக்கணனிகளையும் 6 கையடக்கத் தொலைபேசிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட சட்ட விரோத சிறுநீரக மாற்று சம்பவம் தொடர்பில், 60 வயதான மருத்துவரான ஹிர்டேஸ் செகஸ்னா, ராகவேந்தர் என்று அழைக்கப்படும் 34 வயதான மருத்துவர் சஞ்சய் கபூர், 22 வயது மாணவர் ஏ அசோக், கடவுச் சீட்டு முகவரான 32 வயதான சஞ்சய் குமார் ஜெய்ன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில், ராகவேந்தர் என்பவர் தமது சிறுநீரகத்தை ஏற்கனவே விற்பனை செய்துள்ளார். இவரும் அசோக் என்பவரும் ஆட்களை தெரிவுசெய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்களுக்கு மருத்துவர் செக்ஸ்னா, ஒரு ஆளுக்கு 3 லட்சம் ரூபா என்ற அடிப்படையில் தரகுப் பணம் வழங்கியுள்ளார்.

இதில் 50ஆயிரம் ரூபாவை அசோக், கடவுச்சீட்டு முகவரான சஞ்சய்குமாருக்கு வழங்கி வந்துள்ளார் எனத்தெரிய வந்துள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் நகர்வு நல்லிணக்கத்துக்குச் சவால்!



கடந்த மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழல் அமெரிக்காவின் நிலைப்பாட்டை முற்றாகவே மாற்றி அமைத்திருக்கிறது. ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இலங்கையுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான எல்லா நகர்வுகளையும் அமெரிக்கா மேற்கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவுக்கு மேற்கொண்ட பயணம் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளில் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய விவகாரம் அல்ல.

ஏனென்றால் 2001ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பிரதமர ரணில் விக்ரம சிங்க அரசாங்கத்துடன் அமெரிக்கா எந்தளவுக்கு இறுக்கமான உறவை வைத்திருந்ததோ அதே போன்ற ஒரு உறவுதான் இப்போதும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சில ஆண்டுகளாக அமெரிக்க - இலங்கை உறவுகள் சீர்கெட்டுப் போயிருந்தன.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியுடன் இணைந்து கடந்த வியாழக்கிழமை வாசிங்டனில் செய்தியாளர்கள் முன் கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர இதனை வெளிப்படையாகவே கூறியிருந்தார்.

ஒரு தடங்கலுக்குப் பின்னர் ஆற்றுநீர் எந்தளவுக்கு வேகமாகப் பாயுமோ அதுபோலவே மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது ஏற்பட்டுள்ள தடைகளுக்குப் பின்னர் இருதரப்பு உறவுகள் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அரசாங்கம் பதவியேற்று ஐந்து வாரங்கள் தான் நிறைவடைந்திருக்கின்றன. அதற்குள் ளாகவே அமெரிக்கா இலங்கை உறவுகளில் பெரியளவிலான திருப்பங்கள் நெருக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இது இந்திய - இலங்கை உறவுகளில் ஏற்படுத்தப்பட்ட நெருக்கத்தை விடவும் அதிகமானதாகவே காணப்படுகிறது. மங்கள சமரவீரவின் இந்தியப் பயணம் மட்டுந்தான் இதுவரையில் இந்தியாவுடனான உறவுகளில் நடந்திருக்கிறது. இன்று தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதுடில்லிப் பயணம் நடக்கவுள்ளது. இதன் பின்னர் தொடர்புகள் மேலும் வலுப்பெறும் என்பது வேறுவிடயம். ஆனால் அமெரிக்க - இலங்கை உறவுகளைப் பொறுத்தவரையில் அதற்கு அப்பால் இருதரப்பு பயணங்களும் நடந்திருக்கின்றன. அதுபோலவே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் பல நிகழ்வுகளும் சந்திப்புகளும் இடம்பெற்றுள்ளன. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட ஒரு வாரத்துக்குள் வாசிங் டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழாவில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய, ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் கலந்து கொண்டிருந்தார்.

இது சம்பிரதாயபூர்வமானதாகவே இருந்தாலும் மகிந்த ராஜபகஷ ஆட்சிக்காலத்தில் இதுபோன்ற பங்கேற்புகளில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆர்வம் காட்டியதும் இல்லை. இலங்கைத் தூதரகம் அவர்களை வரவேற்பதற்கு முக்கியதுவம் கொடுத்ததுமில்லை. அதையடுத்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட தரப்பினரைச் சந்தித்து பேசியிருந்தார்.

இது இருதரப்பு உறவுகளை மேலும் நெருக்கமடைய செய்திருந்த நிலையில் கடந்த ஐந்தாம் திகதி வொஷிங்டனில் இலங்கை தூதரகத்தினால் ஒரு வரவேற்பு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் சுதந்திர தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த வரவேற்பு உபசார நிகழ்வில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முக்கியமான அதிகாரிகள் பலரும் கலந்து கொணடிருந்தனர்.

பிரதி இராஜாங்கச் செயலர் அன்ரனி ஜே பிளிங்கன் தெற்கு மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் தெற்கு மத்திய ஆசியாவுக்கான பிரதி உதவி இராஜாங்க செயலர் அதுல் கெசாப் மற்றும் யு.எஸ்.எயிட் உள்ளிட்ட இலங்கையுடன் தொடர்புடைய அமெரிக்க அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இவர்கள் மத்தியில் இன்னொரு ஆச்சரியத்துக்குரிய அதிகாரியும் காணப்பட்டிருந்தார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில், பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தின் தூதுவரான ஸ்டீபன் ஜே ராப் தான் அவர். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் நிபுணரான அவர் தான் மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்குப் பெரும் தலைவலியாக இருந்து வந்தவர். அவர் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது நடத்திய சந்திப்புக்கள், மேற்கொண்ட விசாரணைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியமை நினைவிருக்கலாம்.

அவரும்கூட இலங்கைத் தூதரகத்தின் வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றது எதிர்காலத்தில் போர்க் குற்றங்களுக்கு நீதி கோரும் விவகாரங்களில் அமெரிக்காவின் ஈடுபாடு குறித்த ஐயப்பட்டை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதேவேளை இந்த வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி செயலர் அன்ரனி ஜே பிளிங்கன் எல்லா வழிகளிலும் இலங்கைக்கு உதவ அமெரிக்கா தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார். அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தது பொருளாதாரம் வர்த்தகம் என்று எல்லாவற்றையும் தான். அதில் மனித உரிமைகள் விவகாரத்தில் கொடுக்கப்படும் அழுத்தங்களிலிருந்து விடுப்படுவதற்கான உதவியும் உள்ளடங்கியிருந்தது.

இதையடுத்து வொஷிங்டன் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கடந்த வியாழக்கிழமை அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரி உள்ளிட்ட அதிகாரிகளுடம் பேச்சுக்களை நடத்தியிருந்தார். அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு மிகவும் நெருக்கமான அதிகாரியான தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன்ரை சுடனும் அவர் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

இந்தப் பேச்சுக்களின் போது அவர் போர்க்குற்றங்கள் குறித்து இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருக்கின்றார். அடுத்த மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஐ.நாவின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதை தாமதிக்குமாறு வொஷிங்கடனில் உள்ள சர்வதேச அமைதிக்கான கார்னெகி அறக்கட்டளையில் கடந்த புதன்கிழமை உரையாற்றிய போது மங்கள சமரவீர பகிரங்கமாகவே கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கை அமெரிக்க இராஜாங்கச் செயலருடனான சந்திப்பின் போதும் முன் வைக்கப்பட்டதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றிக் கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என்றும் அது பற்றிய விபரங்களைப் பின்னர் தருவதாகவும் இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஜென்பசாகி கூறியதாக இந்தப் பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது தகவல் வெளியாகியிருக்கிறது.

எவ்வாறாயினும் ஐ.நாவின் விசாரணை அறிக்கையைப் பிற்போடும் விவகாரத்தில் இலங்கைக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்றே எதிர்பார்க்கலாம். ஏனென்றால் அறிகுறியைப் பிற்போடும் விடயம் தொடர்பாக , இலங்கை அரசாங்கத்துக்கு முன்னதாகவே பிரஸ்தாபித்தது அமெரிக்காதான்.

கொழும்பு வந்திருந்த போது, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். எனவே, மங்கள சமரவீரவின் கோரிக்கைக்கு ஜோன் கெரிசாதகமான பதிலைக் கொடுத்திருப்பார் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம். இது தமிழர்களைப் பொறுத்தவரையில் ஏமாற்றமளிக்கும் விடயம் என்பதில் ஐயமில்லை. அமெரிக்காவைப் பொறுத்த வரையில், இலங்கையிடம் நிறைய எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறது. வர்த்தகம், பாதுகாப்பு, இராஜ தந்திர உறவுகள் என்று விரிவானதும் பரந்துப்பட்டதுமான தளங்களில், இலங்கையுடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள எதிர்பார்க்கிறது அமெரிக்கா.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், எதற்காக இலங்கையை அரவணைக்க வேண்டும் என்பது குறித்து அமெரிக்க ஆய்வாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அதுசார்ந்த அமைப்புக ளால் அதிகளவிலான கட்டுரைகள் ஊடகங்களில் வெளியிடப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இவற்றில் இலங்கை மீதான அழுத்தங்களை குறைந்து புதிய அரசாங்கத்துக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பது உறுதியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

புதிய அரசாங்கத்துக்கு கால அவகாசம் கொடுக்கப்படுவதற்கு ஆதரவாக முழுஅமெரிக்காவும் நிற்பதாகவே ஊடகங்கள் உணர்த்தி நிற்கின்றன. இது இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கிடைத்துள்ள சாதகமானதொரு விடயம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. புதிய அரசாங்கம் உள்நாட்டு விசாரணையை எந்தளவுக்கு உறுதியாகவும், நேர்மையாகவும் நம்பகமாகவும் முன்னெடுக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அவ்வாறு நம்பகமான விசாரணைகள் முன்னெடுக்கப்படாது போனாலும்கூட முன்னரைப் போன்று இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாத நிலையையே இப்போதைய அமெரிக்க இலங்கை உறவுகளில் போக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையில் தனக்குச் சாதகமாக அரசாங்கம் ஒன்றை நிறுவுவதில் தான் அமெரிக்கா ஆர்வம் காட்டியது. அதற்காக ஒரு கருவியாகவே தமிழர்களின் பிரச்சினைகளையும், போர்க்குற்ற விவகாரத்தையும் அமெரிக்கா கையாண்டிருகிறது.

இப்போது, அமெரிக்காவுக்குச் சாதகமானதொரு மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், புதிய அரசாங்கத்தைப் பாதுகாக்கும் கடப்பாடு தான் அதற்கு முக்கியமானதாக முன்னுரிமையான விடயமாகத் தெரிகிறது. இலங்கையுடன், பரந்துப்பட்ட உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்பும் அமெரிக்கா, எதிர்காலத்தில் மனித உரிமை விவகாரங்களை முனனிலைப்படுத்தி அழுத்தங்களைக் கொடுககும் என்ற மிகையான எதிர்பாரப்பை தமிழர்கள் கொண்டிருக்க முடியாது. ஜெனீவாவில் இலங்கை அர சுக்கு எந்த அமெரிக்கா, சிம்ம சொப்பனமாக விளங்கியதோ, அதே அமெரிக்காதான், இப்போது நெருங்கிய நண்பனாகவும் மாறி வருகிறது. இந்த மாற்றம் ஜெனீவாவில் நீதியைக் கோரும் தமிழர்களுக்குப் பெரும் பின்னடைவாகவே அமையக்கூடும்.

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அமெரிக்காவுக்கு, இந்தியாவுக்கு உலகின் வேறு பல நாடுகளுக்கும், இலங்கையில் உள்ள சிங்கள முஸ்லிம் மக்களுக்கும், நன்மையைக் கொடுத்திருக்கலாம். ஆனால் கடந்த காலங்களில் அநீதிகளை எதிர்கொண்ட தமிழர்களின் நீதியைத் தேடும் பயணத்திற்கு இந்த ஆட்சி மாற்றம் பாதகமாகத்தான் முடிந்திருக்கிறது என்ற கருத்தே வலுப்பெற்று வருகிறது. இலங்கையில் நிலை யான அமைதிக்கும், உறுதியான நல்லிணக்கத்துக்கும் இதுவும் ஒரு வகையில் சவாலான விடயமாகவே இருக்கப் போகிறது. -சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவுக்கு சலுகை இல்லை!

## அமைச்சர் ரவி தெரிவிப்பு



(கொழும்பு) —

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை செய்ய கோதபாய ராஜபக்ஷவின்வீட்டுக்கு சென்ற குற்றப்புலனாய்வு பொலிஸார் அவரின் வாக்குமூலங்களை பெற்றனர்.

இதனை விசேட சலுகையாக கருதி ரவி கருணாநாயக்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த ரவி கருணாநாயக்க அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் தேவையான சாட்சியங்கள் இருப்பின் சாதாரண நடைமுறையின்படி கோத்தபாய ராஜபக்ஷ, குற்றப்புலனாய்வுத்துறை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவார் என்று தெரிவித்தார்.

கோத்தபாய முக்கியஸ்தராக கருதப்படமாட்டார் என்றும் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமமாகவே கருதப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமது சொத்துக்களை வெளிப்படுத்துமாறு கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தாம் விடுத்த சவாலுக்கு இன்னும் பதில் வழங்கப்படவில்லை என்றும் அமைச்சர் கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-3)

# முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

நாட்டில் கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பிலான தகவல்கள் உள்ளடங்கிய கடிதம் ஒன்றினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்த முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா புதிய அரசின்நூறு நாட்கள் வேலைத் திட்டத்தின் கீழ் இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் உரிய தீர்வை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத்சாலியின் இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போதே முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் எமது முஸ்லிம் மக்களுக்கு எதிராக பல்வேறு அடிப்படைவாதக் குழுக்களினால் அரங்கேற்றப்பட்ட அநீதிகள் தொடர்பிலான தகவல்களை உள்ளடக்கிய கடிதம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

நல்லாட்சிக்கு வித்திட்டுள்ள புதிய அரசானது இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு எமது சமூகத்துக்கான உரிய தீர்வை முன்வைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இதுவரையான காலப்பகுதியில் 226 சம்பவங்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்டுள்ளன.

**இனவாத செயற்பாடுகள்**

எமது நாட்டில் யுத்த காலத்தை விடவும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியிலேயே இனவாத செயற்பாட்டை மூவின மக்களிடையே பரப்பி ஒருசில தரப்பினர் அரசியல் இலாபம் காண்பதற்கு முயற்சித்தனர். இன்று எமது நாட்டில் மட்டுமல்லாது உலக நாடுகளிலும் ஒரு சில தரப்பினர் இனவாதப் போக்கினை கையில் வைத்துக் கொணடு அரசியல் நடத்துகின்றனர்.

எனவே, எமது நாட்டின் மூவின மக்கள் கடும் இனவாத சக்திகளிடம் இருந்து விடுபட்டு அனைத்து மக்களும் சுதந்திரமாக வழி வகுத்திடும் ஒரு நல்லாட்சியின் கீழ் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருகின்றனர். எனவே நல்லாட்சிக்கான புதிய அரசானது மீண்டும் இனவாத போக்கு தலைதூக்குவதற்கு எந்த தரப்பினருக்கும் இடமளிக்காது கடந்த காலங்களில் முஸ்லிம் மக்கள் உட்பட அனைத்து மக்களுக்கு எதிராகவும் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உரிய தீர்வை முன்வைக்க வேண்டும்.

**பேருவளை சம்பவம்**

கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக ஒருசில அடிப்படைவாத சக்திகளினால் அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் செயற்பாடானது இறுதியாக பேருவளையில் உச்சக்கட்டமாக கட்டவிழ்த்து விடப்பட்டது.

பேருவளை வன்முறை சம்பவங்களினால் எமது முஸ்லிம் மக்கள் தமது வீடுகள் உட்பட தமது வியாபாரங்களையும் இழந்து இன்றும் நிர்க்கதியாக வீதிகளில் நிற்கின்றனர்.

முன்னைய அரசானது பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுத்ததைத் தவிர வன்முறையினால் தமது தொழில்களை இழந்து நிற்கும் எமது சமூகத்திற்கு இதுவரையில் எந்த தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. எனவே புதிய அரசானது இதற்கான உரிய தீர்வை முன்வைப்பதோடு கடந்த காலங்களில் இவ்வாறன வன்முறைகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பில விசாரணைகள் மூலம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

**புதிய அரசின் நல்லாட்சி**

புதிய அரசின் நல்லாட்சியின் கீழ் நாட்டின் மூவின மக்களிடையே ஒற்றுமையை எற்படுத்தி சுதந்திரமான முறையில் தத்தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். முப்பது வருட யுத்தத்தில் இருந்து விடுபட்டிருக்கும் நாம் யுத்தத்தில் உயிர் நீத்த எமது இராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமானால் நாட்டில் மூவின மக்களிடையே ஒற்றுமையை தொடர்ந்து பேணி வரவேண்டும். இதுவே நல்லாட்சியின் முக்கிய ஒரு செயற்பாடு. இதனை புதிய அரசு தொடர்ந்து பாதுகாக்கும் என்ற முழு நம்பிக்கை அனைத்து மக்களிடையேயும் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நீலப்படையணி ஒழிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பு மட்டத்தில் நீலப்படையணி எனும் பெயரில் கடந்த காலங்களில் செயற்பட்ட படையணி, இனிமேல் செயற்படாது என்றும் அப்படையணி ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும் சு.க. வின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இனிமேலும் நீலப்படையணி போன்ற படையணிகள் செயற்படமாட்டாது. எங்களிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் மற்றும் மகளிர் அமைப்புகள் மட்டுமே இருந்தன.

கட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள இணை அமைப்புகளை இணைத்துக்கொண்டு எதிர்காலத்தில் செயற்படுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தா. (இ-3)

# இன்று ஒரு தகவல்

## மனநிறைவு

ஓர் ஊரிலே ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்க வேண்டுமென்பது அவரது விருப்பமாக இருந்தது.

தானே அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். ஆதலால், அரண்மனையைச் சுற்றி மரங்களை நட்டார்.

இதைப் பார்த்த மக்களும் தங்கள் வீடுகளிலும் மரக்கன்றுகளை நிறைய நட்டு வளர்த்தார்கள். அதனால் சிறிது காலத்தினுள் அவ்வூரே பசுமையாக மாறிவிட்டது.

ஒருநாள் ராஜா தனது அரண்மனையைச் சுற்றியிருக்கும் விதம் விதமான மரங்களையெல்லாம் சென்று பார்த்தார்.

எந்தவொரு மரமும் சந்தோசமாக இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு மரத்திற்கும் ஏதோவொரு வகையில் குறை இருந்தது கண்டறியப்பட்டது.

முதலில் அரசர் ஆலமரத்திடம் சென்றார். அது கூறியது... "மன்னா... நான் நன்றாகப் பெரிய மரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன்... நாலா புறமும் கிளைகளைப் பரப்பி நன்றாக படர்ந்து தான் இருக்கிறேன். இருந்தாலும் என்ன பிரயோசனம்? எனது பழம் மிகவும் சிறியதாக இருக்கிறது. என் கண்ணுக்கே அவை புலப்படமாட்டாது இருக்கிறதே. எனக்குப் பெரிய அவமானமாக இருக்கிறது. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாமா என்று பார்க்கிறேன்" என்று ஆலமரம் புலம்பியது.

அப்படியே ராஜா அடுத்தபடியாக ஓர் அத்தி மரத்திடம் சென்றார். அதுவும் புலம்ப ஆரம்பித்து விட்டது.

"பழம் அழகாக இருக்கிறது... இருந்தாலும் உள்ளே விடயம் இல்லையே. அத்திப்பழத்தைப் பிரித்துப் பார்த்தால்... அத்தனையும் சொத்தை என்று ஒரு பழமொழியே உண்டாகி விட்டதே... இப்படி ஒரு கெட்ட பெயரோடுதான் இருக்க வேண்டுமா? என்று வினவியது.

"சரி" இருக்கட்டும்... என்று கூறிவிட்டு வேப்ப மரத்திடம் சென்றார்.

"எனக்கு எவ்வளவோ மருத்துவக் குணங்கள் எல்லாம் இருப்பதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள். இருந்தாலும் என்ன பயன்? என்னுடைய பழத்தை மக்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லையே!" என்று தெரிவித்தது. ராஜா... அடுத்த படியாக ஒரு பனை மரத்திடம் சென்றார்.

"நான் நன்றாக உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன். மற்றைய மரங்கள் எல்லாம் என்னை அண்ணார்ந்துதான் பார்க்க வேண்டும்... இருந்தாலும் என்னிடம் நிழலுக்கு யாருமே வந்து ஒதுங்குவதில்லையே!" என்று கூறி அது அலுத்துக் கொண்டது.

அடுத்தபடியாக ராஜா ஓக் மரத்திடம் சென்றார்.

ஓக் மரம் சொல்லியது "இலையுதிர் காலத்தில் என் மீதுள்ள எல்லா இலைகளும் உதிர்ந்து போகின்றன. முடிகொட்டிய மனிதர்களைப் போல மொட்டையாக நான் நிற்க வேண்டியுள்ளது. என்ன வாழ்க்கை இது? எல்லாம் என் தலையெழுத்து?" என்று கூறியது.

ராஜா யோசித்தார். என்ன இது? மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பெய்வதற்கே மரங்கள் தான் காரணம். அவைகளால் தான் பூமியே செழிப்பாகவே இருக்கிறது. வீடு கட்ட, தளபாடங்கள் செய்ய மரங்கள் உபயோகப்படுகின்றன என்று தன்னகத்தே நினைத்தார்.

அப்போது அவ்விடத்தில் நின்ற ஒரு மகிழமரம் அவர் கண்ணில் தென்பட்டது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக, மகிழ்ச்சியாக, மனநிறைவுடன் காட்சியளித்தது.

அது கூறியது மன்னா... இந்த இடத்தில் நீங்கள் ஒரு முருங்கை மரத்தையோ... வேப்ப மரத்தையே கூட நட்டிருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே... அதுவே எனக்கு மகிழ்ச்சி... அதுவே எனக்கு பூரண திருப்தி என்றது மகிழமரம்.

மகிழமரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்தில் பூக்கள்... அது காய்ந்து மணம் வீசும்.

மகிழமரம் போல மனதிருப்தியுடன் வாழ்வதற்கு மனிதர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2015 - 14.03.2015



**நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும் நேரம்! இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு என்ற கருத்தை வலியுறுத்தி சொல்லும் தனுசு ராசி நேயர்களே!**

உங்கள் ராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகங்கள் வசீகரம் பெறும் பொழுது மிகுந்த நன்மைகளை வழங்கும். இருப்பினும் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கமும் உங்களுக்கு இருக்கிறது. எனவே, கூடுதல் விரயங்கள் உருவாகி குடும்பத்தில் மகிழ்ச்சியை குறைய வைக்கலாம். கடுமையாக முயற்சித்த காரியங்கள் முடிவடைவதுபோல் இருந்து கடைசி நேரத்தில் கை நழுவிச் செல்லலாம்.

என்ன இருந்தாலும் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்தால் தான் இம்மாதத்தில் மகிழ்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள இயலும். விரயஸ்தானத்தில் சனி சஞ்சரித்தாலும் கூட வியாழன் பார்வை அதன்மீது பதிவதால் சுபவிரயங்களே அதிகரிக்கும் என்று சொல்லலாம். இது போன்ற காலங்களில் வரும் தொகையை வைப்பு நிதியாக வைககாமல் பொருளாக மாற்றி வைத்துக் கொள்வது நல்லது.

வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதோடு அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கலாம். மின்சாதனப் பொருட்களான மிக்சி, கிரைண்டர், வாஷிங் மிஷின் போன்றவைகள் அடிக்கடி பழுதாகிறதே என்று கவலைப்படுவீர்கள். அவற்றைக் கொடுத்துவிட்டு புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள். அதுமட்டுமல்லாமல் ஆபரணங்கள் வாங்குவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள். அதற்கேற்ற விதத்தில் பொருளாதார நிலை இடம் கொடுக்கும்.

10இல் ராகு சஞ்சரிப்பது யோகம் தான். தொழில் வளர்ச்சியில் மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு

## நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும் நேரம்!

கூடுதலாக இருக்கும். பழைய தொழிலைப் பாதியிலேயே விட்டு விட்டுப் புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்ற ஒரு சிலர் முன்வருவர். என்னயிருந்தாலும் ராகு-கேது ஆகிய இரண்டு கிரகங்களுக்குள் பெரும்பான்மையான கிரகங்கள் சிக்கியிருப்பதால், சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கமே மேலோங்கி இருக்கின்றது என்று கருதலாம். எனவே சர்ப்ப சாந்தியை முறையாகச் செய்தால் அற்புதப் பலன்கள் உடனடியாகக் கிடைக்கும்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

மீன ராசியில் பிப்ரவரி 17ஆம் திகதி சுக்ரன் உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக இடம், பூமி விற்பனையால்




லாபம் கிடைக்கும். வாங்கிப் போட்ட இடம் நல்ல விலைக்கு விற்குமா? என்று ஏங்கிய உள்ளங்கள் மகிழ்ச்சியடையும் விதத்தில் பல மடங்கு ஆதாயம் காணப் போகிறீர்கள். அதில் வரும் தொகையை மூலத னமாகக் கொண்டு புதிய தொழில் தொடங்கும் திட்டங்களைக் கூட நிறைவேற்றிக் கொள்வர். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் நடைபெறும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேர்ந்து உங்கள் பணிக்கு உறுதுணை புரிவர். பங்காளிப் பகை மாறும்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 4ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 7, 10இற்கு அதிபதி 3இல் சஞ்சரிக்கும் பொழுது வழ க்குகள் சாதகமாகும். வரவு திருப்திகரமாக இருக்கும். கலக்கம் அக ன்று கனிவு கூடும். வெளி வட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். வேற்று மனிதர் கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு உறுதுணை புரிவர். அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 13ஆம் திகதி மேஷ ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலத்தில் உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்.

எதிர்பார்த்தபடியே மேலதிகாரிகளின் அனுகூலம் கிடைக்கும். கடன் சுமை குறையும். வியாபாரப் போட்டிகள் அகலும். குழந்தைகளின் வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்திருந்தால் அவர்களுக்கு வேலையும் கிடைத்து. அதன் மூலம் வருமானமும் வந்து சேரும். சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் வியாழக் கிழமை தோறும் குரு தட்சிணா மூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவராத்திரி நாளில் சிவனையும் வழிபாடு செய்யுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். வீட்டுத் தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும். கொடுக்கல் வாங்கல்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் ஒற்றுமை பலப்படும். குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலம் ஒரு சிலருக்கு பிரச்சினைகள் உருவாகலாம.

வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தாய்வழி ஆதரவோடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். சனி ஆதிக்கம் இருப்பதால் பொறுமையோடு செயற்படுவது நல்லது. விலை உயர்ந்த பொருட்களை வாங்கலாம். சிவாலய வழிபாடு சிறப்பினை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**முன்யோசனையுடன் செயல்பட்டால் முன்னேற்றம் கிட்டும்! அபாரமான ஞாபக சக்தியால் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் மகர ராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு 6, 9இற்கு அதிபதியாக புதன் சஞ்சரிக்கின்றார். 12இற்கு அதிபதி குரு வக்ரம் பெற்றுப் பார்க்கிறார். 3இற்கு அதிபதியாகவும் குரு விளங்குகிறார். எனவே, சகாய ஸ்தானாதிபதியாக இருக்கும் குரு வக்ரம் பெறுவது அவ்வளவு நல்ல தல்ல. எனவே, இம்மாதம் செய்யும் செயல்பாடுகளில் தீவிரம் காட்ட வேண்டாம். எதையும் முன்யோசனையுடன் செய்தால் தான் முழுமையான வெற்றி கிடைக்கும். பண நெருக்கடி ஏற்பட்டாலும் கூட தேவைக்கேற்ற பணம் வந்து சேரும்.

அஷ்டமாதிபதி சூரியன் வாக்கு ஸதானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, கோபமும், படபடப்பும் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களின் குணத்தைப் புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது. சுக்ரனும் 2இல் இருநதால் வாக்கு சாதுர்யத்தால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். சிக்கல்களிலிருந்து விடுபட சிறப்பு வழிபாடுகளை நீங்கள் மேற்கொள்வது நல்லது. ஏன் என்றால் சனி உங்கள் ராசியைப் பார்க்கின்றார். ராசிநாதனான சனியை ராகுவும், குருவும் பார்க்கிறார்கள். எனவே, திடீர், திடீரென நீங்கள் மனம், குணம் மாறுவீர்கள். ஒரு நேரத்திலிருந்தது போல் மற்றொரு நேரத்தில் நீங்கள் இல்லையே என்று குடும்ப உறுப்பினர்கள் சொல்வார்கள். உங்கள் மனதில் இடம் பெற்ற இனம்புரியாத

## முன்யோசனையுடன் செயற்பட்டால் முன்னேற்றம் கிட்டும்!

கவலை மாற, மந்தன் சனியை மறவாமல் வழிபட வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனி பகவானை அர்ச்சித்து வழிபடுவதோடு சனி கவசமும் பாடுங்கள். கவசம் பாடினால் கவலை தீரும். காரிய வெற்றி கிடைக்கும். 3இல் கேது இருப்பதால் உடன்பிறப்புகளின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வீடுமாற்றச் சிந்தனை ஒரு சிலருக்கு மேலோங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.




**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 17ஆம் திகதி மீன ராசியில் சுக்கிரன் உச்சம் பெறப் போகிறார். 5, 10இற்கு அதிபதி உச்சம் பெறும் பொழுது பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும். தொழிலில் மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கூடுதலாக கிடைக்கும். தொகை வரவில் இருந்த தடைகள் அகலும். பெண் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 4ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 6, 9இற்கு அதிபதியான புதன் 2இல் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். தந்தை வழி உறவில் இருந்த பகை மாறும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். புதிய சொத்துக்கள் வாங்குவதிலும் ஆர்வம் காடடுவீர்கள். வாகன மாற்றம் செய்யும் சிந்தனை மேலோங்கும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள்வாங்க முன்வருவீர்கள்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 13ஆம் திகதி மேஷ ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது நன்மைகளைத் தரும் காலம் தான். சுக்ரனின் பார்வை 10ஆம் இடத்தில் பதிவதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அடகு வைத்த நகை களை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் சூழ்நிலை உண்டு. இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொளளுங்கள். சிவராத்திரியன்று சிவாலய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள், சிறப்பான வாழ்க்கை அமையும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி, மாறி வரும் மாதமாக அமைகின்றது. வாக்கு ஸ்தானத்தில் சூரியன் பலம் பெற்றிருப்பதால் கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயல்படுவது நல்லது.

பணப்புழக்கம் நன்றாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். கும்ப புதனின் சஞ்சாரத்திற்குப் பிறகு குடும்பத் தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெறும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். கல்யாணக் கனவுகள் நனவாகும். சகோதர வர்க்கத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்-மனைவி உறவில் திருப்தி ஏற்படும். ஆரோக்கியப் பாதிப்புகள் அகல அடிக்கடி மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. சிவராத்திரியன்று சிவன் வழிபாட்டையும், சனிக்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தின் பதில் தாக்குதலில் 7 பொதுமக்கள் உயிரிழப்பு!

**(திரிபோலி)**

**லிபியாவின் வடகிழக்கு பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட எகிப்திய வான் வழி தாக்குதல்களில் சிறுவர்கள் மூவர் உட்பட பொதுமக்கள் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த வான் வழித் தாக்குதல் எகிப்தின் கெய்ரோவிலிருந்து மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவித்துள்ளன.**



எகிப்தின் கிறிஸ்தவ இளைஞர்கள் 21 பேரை தலை துண்டித்து இஸ்லாமிய அரசு கிளர்ச்சியாளர்கள் கொலை செய்தமைக்கு அவர்கள் கட்டாயம் தண்டிக்கப்படுவார்கள் என எகிப்து ஜனாதிபதி அப்துல் ஃபத்தா எல் சிசி தெரிவித்திருந்தார். அதனையடுத்து. இஸ்லாமிய அரசு கிளர்ச்சியாளர்களின் முகாம்கள் மீது எகிப்திய விமானங்கள் நேற்று முன்தினம்திங்கட்கிழமை அதிகாலை முதல், வான்வழி தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்தன.

லிபியாவுக்கு அருகிலுள்ள இஸ்லாமிய அரசு கிளர்ச்சியாளர்களின் முகாம்கள், பயிற்சி நிலையங்கள் மற்றும் ஆயுத களஞ்சியங்கள் மீது வான் வழி தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக எகிப்து, நேற்று முன் தினம்திங்கட்கிழமை அறிவித்திருந்தது.

எவ்வாறாயினும் இந்த தாக்குதல்களில் பொதுமக்களின் குடியிருப்புகள் சேதமடைந்திருப்பதை சமூக வலைத்தளங்களில் வெளியான புகைப்படங்களில் காண முடிகின்றது.

லிபியாவிற்கு வேலை தேடிச் சென்ற 21 எகிப்திய கிறிஸ்தவர்கள் பல வாரங்களுக்கு முன்னர் தீவிர வாதிகளால் கடத்தப்பட்டனர். இந்நிலையில், கடற்கரையில் அழைத்துச் செல்லப்படும் 21 எகிப் திய கிறிஸ்தவர்கள் மண்டியிட வைக்கப்பட்டு தலை துண்டித்து கொல்லப்படும் காணொலியை தீவிர வாதிகள் வெளியிட் -தில் இந்த தாக்குதல்களை எகிப்து ஐ.எஸ். ஐ.எஸ்.கிளர்சியாளர்கள் மீது மேற் கொண்டுள்ளது. (இ-5)

# ஆஸியிலும் நிலநடுக்கம்

அவுஸ்திரேலிய குயீன்ஸ்லாந்து பிராந்தியத்தில நேற்று முன்தினம்திங்கட்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அரிதாக தாக்கிய இந்த பூமியதிர்ச்சிகள் நூற்றுக்கணக் கான கிலோ மீற்றர் தொலைவில் உணரப்பட்டுள்ளன.

முதலாவது 5.2 ரிக்டர் பூமியதிர்ச்சி எயிட்ஸ் வோல்ட் நகருக்கு அருகில் தாக்கியுள்ளது.

அதற்கு சுமார் ஒரு மணித்தியாலம் கழித்து இரண்டாவது பலவீனமான பூமியதிர்ச்சி அந் நகருக்கு அயலிலுள்ள மவுண்ட் பெரியில் தாக்கியுள்ளது.

இதனால் மின் துண்டிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. மேற்படி பூமியதிர்ச்சிகளால் எவரும் காயமடைந்ததாக அறிக்கையிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# அமெரிக்காவில் இந்துக் கோவிலில் வெறுப்பூட்டும் சித்திரத்தால் பரபரப்பு

வோஷிங்டனின் சியாட்டில் நகரின் ஸ்னோகோமிஷ் கவுண்டியில் உள்ள இந்து கோவிலின் சுற்றுச் சுவரில் மர்ம நபர்கள் 'ஸ்வஸ்திக்' முத்திரையை வரைந்து அதன் மேலே இனவெறியை வெளிப்படுத்தும் "கெட் அவுட்" விஷமத்தனமான வாசகங்களை எழுதியிருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னரும் கோவிலின் சுற்றுச்சுவரில் இது போன்ற முத்திரையை மர்ம நபர்கள் வரைந்திருந்தனர். ஆனால் அதில் எதுவும் எழுதப்படாததால் பொலிஸில் புகார் அளிக்கவில்லை. தற்போது முத்திரையின் மேல் மர்ம நபர்கள் சிலர் 'வெளியே போ' என்று எழுதியிருப்பது வருத்தமளிக்கிறதென்று கோவில் அறங்காவலர் குழுவின் தலைவர் நித்யா நிரஞ்ஜன் தெரிவித்தார்.

மேலும் "இதுபோன்ற சம்பவங்கள் அமெரிக்காவில் நடக்கக் கூடாது. இது குடியேறியவர்களுக்கான நாடு. எங்களை வெளியேற சொல்வதற்கு நீங்கள் யார்? என்றும் அவர் கேள்வி யெழுப்பினார்.

தீங்கிழைக்கும் துன்புறுத்தல் என்ற வகையில் இந்த வழக்கை ஸ்னோகோமிஷ் கவுண்டி ஷெரீபின் துறை விசாரித்து வருகிறது. நேற்று முன்தினம் கோவிலை பார்வையிட்ட அந்த கவுண்டியின் உயர்அதிகாரிகள், இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர். (இ-3)

# மொசூல் நகரை மீட்க ஈராக் படையினர் திட்டம்

இஸ்லாமிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஈராக்கின் வடக்கு நகரமான மொசூலை மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட ஈராக்கிய அரசபடையினர் திட்டமிடுவதாக ஈராக்கின் பிரதமர் ஹைதர் அல்-அபாதி தெரிவித்துள்ளார். குறைந்தபட்ச உயிரச் சேதத் துடன் அடுத்த சில மாதங்களில் மொசூல் நகரம் தீவிரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் என்று தான் நம்புவதாக கடந்த செப் டெம்பர் மாதம் பிரதமராக பதவியேற்ற அபாதி தெரி வித்துள்ளார்.

பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரமான மொசூல், கடந்த ஜூன் மாதம் இஸ்லாமிய அரசால் கைப்பற்றப்பட்டது. மொசூல் நகரை மீட்கும் திட்டத்திற்கு, அமெரிக்க தலைமையிலான கூட்டணி படை மற்றும் குர்திய படைகளின் ஆதரவும் தேவை என்றும்பிரதமர்அபாதி மேலும் தெரிவித்துள்ளார். (இ)




# சுனாமி எச்சரிக்கையினால் ஜப்பானில் மக்கள் பதற்றம்

ஜப்பானில் நேற்றுக் காலை 8 மணி அளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வடகிழக்கு பகுதியில் உள்ள இவாட் மாகாணத்தின் கடற்கரை பகுதியில் பூமி அதிர்ந்தது. அதை தொடர்ந்து அங்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. எனவே பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித்தனர்.

இங்கு 6.9 ரிக்டர் ஆக நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. இவாட் மாகாணத்தில் கடலுக்கு அடியில் 10 கி.மீற்றர் (6 மைல்) ஆழத்தில் அது உருவாகியுள்ள்து. இதனால் கடலில் வழக்கத்துக்கு மாறாக அலைகள் உயரமாக எழும்பின. நில நடுக்கம் ஏற்பட்ட 45 நிமிடங் களுக்கு பிறகு 10 செ.மீற்றர் அளவுக்கு அலைகள் உருவாகின.

எனவே ஜப்பான் வானிலை மையம் சுனாமி எச்சரிக்கை விடுத்தது. அதை தொடர்ந்து கடலோரத்தில் தங்கியிருக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். உடனே அங்குள்ள மக்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களை தேடி கூட்டம் கூட்டமாக புறப்பட்டு சென்றனர்.

இந்த நிலநடுக்கம் 690 கி.மீற்றர் தொலைவில் உள்ள தலைநகர் டோக்கியோவிலும் உணரப்பட்டது. எனவே நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில் சேத மதிப்பு அதிக அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் சேத விபரங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இதே பகுதியில் நிலநடுக்கமும், சுனாமியும் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இத்தாலிக்கு செல்ல முயற்சித்த 2000 குடியேற்றவாசிகள் மீட்பு



இத்தாலிய கரையோர காவல் படையினர் லிபிய கடற் கரைக்கு அப் பால் மேற்கொண்ட பிரதான தேடுதல் நடவடிக் கையின் போது, 2000 இற்கு மேற்பட்ட குடியேற்றவாசிகளை மீட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தேடுதல் நட வடிக்கையின் போது லிபியாவிலிருந்து அதிவேக படகுகளில் இத்தாலியை நோக்கி வந்த துப்பாக்கிகளை ஏந்திய குழு வொன்றால் கரையோர காவல் படையினர் அச்சுறுத்தலை எதிர் கொண்டதாக கூறப்படுகிறது.

கடந்த வாரம் மத்தியதரைக் கடலில் படகுகள் மூழ்கியதால் குறைந்தது 300 குடியேற்றவாசிகள் உயிரிழந்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை லிபிய கடற்கரைக்கு அப்பால் சுமார் 50 மைல் தொலைவில் 600 குடியேற்றவாசிகள் மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பிந்திய மீட்பு நடவடிக்கையில் ஒரு விமானம், 4 கரையோர காவல்படை கப்பல்கள், இரு படகுகள், ஒரு கடற் படை கப்பல் என்பன ஈடுபட்டன.

அந்தக் குடியேற்றவாசிகள் 12 படகுகளிலிருந்து மீட்கப்பட்டு இத்தாலிக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக இத்தாலிய போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

இந்த மீட்பு நடவடிக்கையின் போது துப்பாக்கியுடன் காணப்பட்ட 4 ஆண்கள், குடியேற்றவாசிகள் பயணம் செய்த படகு ஒன்றுக்கு திரும்ப கரையோர காவல் படையினருக்கு உத்தரவிட்டு விட்டு படையினரின் படகில் ஏறி தப்பிச் சென்றதாக போக்குவரத்து அமைச்சர் மோரிஸியோ லுபி கூறினார்.

கடந்த ஆண்டில் ஐரோப்பாவை சென்றடையும் முகமாக மத்திய தரைக்கடலைக் கடக்க மேற்கொண்ட முயற்சியின் போது 3500 பேர் பலியாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிலையம் தெரி விக்கிறது. அக்காலப் பகுதியில் 2இலட்சம் பேருக்கும் அதி கமானோர் உயிருடன் மீக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது கூட்டணியே ஆட்சியமைக்குமாம்

## சுசில் நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டு கூடிய ஆசனங்களை பெற்று எமது அரசாங்கத்தை அமைப்பதற்கான வியூகங்களை அமைத்து வருகின்றோம் என்று சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஐ.ம.சு.முவின் செயலாளருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் குறிதது ஐ.தே.கவே பேசிவருகின்றது.

நாங்கள் தேசிய அரசாங்கத்துக்கு தயார் இல்லை. தற்போதைய நிலையில் தேசிய அரசாங்கப் பேச்சுக்கு இடமில்லை. எமது கூட்டணியின் பெரும்பான்மை எம்.பிக்களைக் கொண்ட ஆசனங்களை நாங்கள் பெற்று ஆட்சியமைப்போம்.

சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமது தேர்தல் பிரசார மேடையில் ஏறுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோரையும் இணைத்துக்கொண்டு எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள சுசில் பிரேம ஜயந்த நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இந்த விடயங்களை தெரிவித்தார்.

### தேர்தல் விஞ்ஞாபனம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தலைமையகமாகக்கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும். முன்னணியின் ஏனைய கட்சிகள் இன்னும் விலகுவதாக அறிவிக்கவில்லை.

இந்நிலையில் தேர்தலில் பெரும்பான்மை பலத்தை பெற்று ஆட்சியமைப்பதே எமது நோக்கமாகும். எமது அரசாங்கம் ஒன்றை நாங்கள் அமைப்போம். எனவே தற்போது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

### 100 நாட்கள் திட்டத்துக்கு ஆதரவு

அசராங்கத்தின் 100 நாட்கள் திட்டத்துக்கு ஆதரவளிப்போம். அதில் சில திருத்தங்களை செய்து ஆதரவளிப்போம். அதில் சில திருத்தங்களை செய்ய வேண்டியுள்ளது. அவற்றை நாங்கள் முன்வைப்போம். இது தொடர்பில் ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### ஒழுக்கக்கோவை

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகளுக்காக ஒழுக்கக்கோவை ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதனை விரைவில் தயாரித்துவிடுவோம். அதன் பின்னர் அந்த ஒழுக்கக் கோவையை மீறுகின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் இரண்டு வாரங்களில் கட்சியை பலப்படுத்தும் செயற்பாடுகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்போம். 160 தேர்தல் தொகுதிகளிலும் மறுசீரமைப்பை முன்னெடுப்போம். எதிர்வரும் மேதினத்தை சிறப்பாக கொண்டாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் நாங்கள் 9 மாவட்டங்களில் வெற்றி பெற்றோம. மைத்திரிபால சிறிசேன 13 மாவட்டங்களில் வெற்றிபெற்றனர்.

மூன்று மாவட்டங்களில் சிறிய வித்தியாசத்தில் தோல்வியடைந்தோம். இந்நிலையில் சிறிய வித்தியாசத்தில் தோல்வியடைந்த மாவட்டங்களை வெற்றிகொள்வோம்.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களை கூட்டமைப்பு வெற்றிகொள்ளும். எனவே ஐக்கிய தேசிய கட்சியினால் 7 மாவட்டங்களையே வெற்றிகொள்ள முடியும்.

அந்தவகையில் வெற்றி பெறுவது நாங்களே என்பது உறுதியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# வெலே சுதாவின் களஞ்சியசாலையில் 22 உழவியந்திரங்கள் மீட்கப்பட்டன!

(கொழும்பு)

**சர்வதேச போதைப்பொருள் வர்த்தகரான வெலே சுதா என்றழைக்கப்படும் சமந்த குமாரவினால் களனி, சிங்காரமுல்லை பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்த போதைப் பொருள் களஞ்சியசாலை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சோதனையிடப்பட்டதில், அங்கிருந்து கியர் பெட்டிகளற்ற 26 உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.**

இந்த உழவு இயந்திர வண்டிகளிலுள்ள கியர் பெட்டிகளை அகற்றி, அவ்விடங்களில் வைத்தே போதைப்பொருள் கடத்தப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித்ரோஹண தெரிவித்தார.

அத்துடன், இவ்வாறு கைப்பற்றப்பட்ட உழவு இயந்திர வண்டிகளில் தலா 20 கிலோகிராம் போதைப் பொருட்கள் மறைக்கப்பட்டு கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் இந்த வண்டிகளில் வைத்து மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் வர்த்தகத்துக்கும் வெலே சுதாவுக்கும் தொடர்பு உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

மில்லேட் மெசிபர்கயூஷன் ரக உழவு இயந்திரங்களான இவை, பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவையாகும். கியர் பெட்டிகள் இருக்க வேண்டிய இடங்களில் மறைக்கப்பட்டே பாகிஸ்தானிலிருந்து இந்த வண்டிகள் ஊடாக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்பட்டிருக்கலாம்.

இலக்கம் 875, பியகம களனி வீதி, சிங்காரமுல்லை என்ற முகவரியிலேயே மேற்படி களஞ்சியசாலை நடத்தப்பட்டு வந்ததாகவும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரே இந்த களஞ்சியசாலையை சோதனையிட்டு வாகனங்களை கைப்பற்றினர்.

இந்த களஞ்சியசாலையானது, மாதத்துக்கு 1 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் அடிப்படையில் பிரித்தானியாவைச் சேர்ந்த ஜெரோம் டக்ளஸ் என்பவரால் வாடகைக்கு பெறபட்டுள்ளது.இருப்பினும் அதில், இக்ரம் மற்றும் இம்ரான் என்ற பெயர்களைக் கொண்ட பாகிஸ்தானியர்கள் இருவரே சேவையில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த உழவு இயந்திர வண்டிகள் துறைமுகத்திலிருந்து எவ்வாறு கொண்டுவரப்பட்டன, அவற்றின் மூலம் எவ்வாறு போதைப் பொருட்கள் கடத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பில் விசாரணை நடத்தி வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 110-140 | 160 | 160 |
| தக்காளி | 200-220 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 100 | 90 | 80 |
| கரட் | 160 | 140 | 160 |
| பூசணி | 120 | 100 | 120 |
| புடோல் | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 80-90 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 120-140 | 140 | 200 |
| லீக்ஸ் | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 650 | 800 |
| போஞ்சி | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | — |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 20 | 20 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 90-120 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 70-110 | 100 | 140 |

# பிரிவுத்துயர் பகிர்வு



### Dr.கனகசபாபதி நிர்மலகுமார்

யாழ்ப்பாணம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் லண்டணைவசிப்பிடமாகவும்கொண்ட Dr.கனகசபாபதி. நிர்மலகுமார் கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 21ஆம் திகதி பி.ப 1மணியளவில் Fredeck W paine funeral Directors,265 Ewell Road, Surbiton,Surrey KT6 7AA, United Kingdom என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் தகனம் செய்யப்படும்.



### திருமதி.தையல்நாயகி ஞானசம்பந்தன்

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தையல்நாயகி ஞானசம்பந்தன் கடந்த 13ஆம் திகதி அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை மு.ப 10 மணிக்கு சுதுமலை தெற்கு பதிவாளர் தெருவில் அமைந்த அவரது இல்லத்தில் நடைபெற்று,தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.



### திருமதி.தெய்வானை கந்தசாமி

யாழ்.அனலைதீவைப் பிறப்பிடமாகவும்,கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.தெய்வானை கந்தசாமி அவர்கள் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பி.ப 5மணியளவில் St.John's dixie Ceme tery & Crematorium, 737 Dundas Street East Mississauga, ON L4Y 2B5, Canada என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை மு.ப 9 மணிக்குதகனம்செய்யப்படும்.



### செல்வராசா றொபின்சன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்,பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா றொபின்சன் அவர்கள் கடந்த 14 ஆம் திகதியன்று காலமானார்.அன்னாரின் திருப்பலி ஆராதனைகள் நாளை பி.ப ஒரு மணியளவில் 22Rue du Colonel Fabinen,95140 Garges-Les-Gonesse, France என்னுமிடத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி.மாலினிதேவி இராசரத்தினம்

யாழ்.உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும்,ஜேர்மனியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி.மாலினிதேவி இராசரத்தினம் அவர்கள் கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை மு.ப 11 மணியளவில் Sudfridhof Rudolf-Diesel-Strabe,53859 Niederkassel,Germany என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும.



### திருமதி.இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை

யாழ்.வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை பி.ப 1 மணியளவில் இல.09,முருகமூர்த்தி வீதி,வண்ணார்பண்ணை என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கமலநாதன் சத்தியேஸ்வரன்

யாழ்.நீர்வேலி அச்செழுவைப் பிறப்பிடமாகவும்,பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட கமலநாதன் சத்தியேஸ்வரன் அவர்கள் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் Crematorium du Pere Lachaise,71 Rue des Ronde aux, 750 20 Paris, France என்னுமிடத்தில் நாளை வியாழக் கிழமை மு.ப 11.30 மணிக்கு தகனம் செய்யப்படும்.



### திருமதி.பிறிசில்லாகிளறிஸ் கிறிஸ்சோஸ்ரம்

யாழ்ப்பாணம் சுஞ்சுவாங் கோயிலடியை பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பிறிசில்லா கிளறிஸ் கிறிஸ்சோஸ்ரம் அவர்கள் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணி முதல் Paroisse St Andre தேவாலயத்தில் (5,av Karl Marx 93000 Bobigny),(Metro- Bobigny, Tram:Liberation) என்னும் இடத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அன்றைய தினம் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடற் தகுதியீனமுற்ற ஒருவர்

# விசேட வாகனத்தை பயன்படுத்தி வாக்களிக்க விண்ணப்பிக்கலாம்

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப் பற்று பிரதேச சபைகள் தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

இத் தேர்தலின் உட்ற் தகுதியீனமுற்ற ஒருவர் வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று வருவதற்கு விசேட வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பம் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவினால் கோரப்படுகின்றது.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இதற்கமைய ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக எவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரத திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்றுவர முடியாதவராக இருந்தால்தான் வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானாகவோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேறொருவர் வேட்பாளரல்லாத வேறு ஒருவரால் விண்ணப்பிக்கலாம்.

இவ் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக (எதிர்வரும் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக) உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு வைத்திய அத்தாட்சிப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்திற்கென அந் நபருக்கு விசேடபோக்குவரத்துவசதியினைப்பெற்றுக்கொள்வதற்கான உத்தரவுப்பத்திரத்தை வழங்கலாம்.

தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஒருவர் அரசாங்க வைத்தியரிடம் பதிவு செய்த அல்லது உதவி வைத்திய தொழில் புரியும் ஒருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ் வைத்திய அறிக்கையினை கட்டணமெனவுதுமின்றிப் பெற்றுக் கொள்ளலாம்.

தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியரிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




## தீவிபத்தில் வீடு எரிந்து நாசம்



(குருமன்காடு)

வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் வீடு முற்றாக எரிந்து நாசமாகியது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா மகாறம்பைக்குளத்தில் நடைபெற்றுள்ளது.

வீட்டின் எதிர்ப்பக்கமாக மரம் ஒன்று எரியூட்டப்பட்டிருந்தது. அதிலிருந்து தீப்பொறியொன்று வீட்டின் கொட்டகை மீது விழுந்தமையினால் இச்சம்பவம் நேர்ந்துள்ளது.

இச்சம்பவத்தினால் வீட்டில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளன. இதன்போது எவருக்கும் தீக்காயங்கள் ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று உடனடி தேவைக்குரிய பொருட்களை பெற்று கொள்வதற்கு நிதி வழங்கியதோடு தற்காலிக கொட்டகை அமைப்புதற்குரிய ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளனர். (அ-2-250)

## வவுனியாவில் வாள்வெட்டு: நால்வர் விளக்கமறியலில்

(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெற்ற சில வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வரை தாம் கைது செய்து வவுனியா நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைத்துள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்.

வவுனியாவில் கடந்த 14 ஆம் திகதி காதலர் தினத்தன்று இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர். இதனுடன் தொடர்புடைய வவுனியா. ஆச்சி புரம் பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்களை கைது செய்துள்ளோம். அவர்களிடம் இருந்த இரண்டு வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக தீவிர விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-2-250)

## வன்னியூர் செந்தூரனின் நூல்வெளியீடு

வவுனியா தமிழ்ச் சங்கம் வெளியிடும், வன்னியூர் செந்தூரனின் **கற்சிலைமடு நாகம்மாள் ஆலய சரித்திரம்** எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கற்சிலை மடு அருள்மிகு நாகம்மாள் ஆலய மணிமண்டபத்தில் நடைபெறும்.

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இவ் வெளியீட்டு நிகழ்வில் ஆசியுரையை ஆலய அர்ச்சகர் சிவத்திரு.கந்தையா சிவராசா வழங்க வாழ்த்துரையை வைத்தியர் நா.வன்னியசிங்கம் நிகழ்த்துவார். த்லை மையுரையைத் தொடர்ந்து வெளியீட்டுரையை முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சமாசத்தின் பொது முகாமையாளர் சி.வேதவனம் ஆற்றுவார்.

விமர்சன உரையை கற்சிலைமடு மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா நிகழ்த்துவார். (அ-2)

## காடுகள் அழிக்கப்படுவதை தடுக்க விசேட குழு அமைப்பு

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல பகுதிகளில் காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதோடு முறையற்ற விதத்தில் மண் அகழ்வும் இடம்பெறுகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அப்பிரதேசங்களை உள்ளடக்கிய சுமார் முப்பது பேர் கொண்ட விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலம் தொடக்கம் இன்று வரை மன்னார் மாவட்டத்திலே பல்வேறு தரப்பினராலும் வளச் சுரண்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதை தடுத்து நிறுத்த வேண்டிய அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக இருப்பதனால் அரச அதிகாரிகளும் வளச் சுரண்டல்களில் ஈடுபடுகின்றனர்.

இதனால் தம்மால் எதனையும் செய்ய முடியவில்லை என குறிப்பிட்ட அப்பகுதி மக்கள் வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனை அடுத்து அங்கு சென்ற அவர் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அப்பிரதேசத்தில் உள்ள கிராம மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களை உள்ளடக்கியதாக ஒரு விசேட குழுவொன்றை உருவாக்கியுள்ளனர்.

இனிவரும் காலங்களில் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் வளங்கள் அழிக்கப்படுவதை அனுமதிக்கப் போவதில்லை என அக்குழு முடிவெடுத்துள்ளதுடன் இதற்கெதிராக பெரும் நடவடிக்கை ஒன்றையும் மேற்கொள்ளப்போவதாகவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (அ-2)

## புரட்சியின் சிறுகதை வெளியீடு

யோ.புரட்சி எழுதிய **ஆஷா நாயும் அவளும்** எனும் சிறுகதை நூல் வெளியீடு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு, விசுவமடு இளங்கோபுரம் பாடசாலைக்கு எதிரில் உள்ள காட்டில் இலக்கிய விமர்சகர் **கம்பீரக் குரலோன்** சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெறும்.

லண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகத்தினால் வெளியிடப்படும் இந்த நூலுக்கு லண்டன் வாழ் எழுத்தாளர் வவ்னியூர் உதயணன் வாழ்த்துரை வழங்கியுள்ளார்.

இந் நூலுக்கும் எழுத்தாளரின் தாயார் செல்லமுத்து தன் கையெழுத்திலேயே ஆசியுரை வழங்கியுள்ளார். யோ.புரட்சி எழுதிய **எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும்** கவிதை நூல் கடந்த வருடம் கடலில் வைத்து வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)





வ/ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு கடந்த 14 ஆம் திகதி வித்தியாலயத்தின் அதிபர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள யுத்தத்தால் அவையவங்களை இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில் உதவித்திட்ட நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரியில் மாற்றுத்திறனாளிகள் அங்கத் தலைவி எஸ். சசிகலா தலைமையில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் அகிலன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வுபெற்ற பீடாதிபதி எஸ். கே. யோக நாதன் ஆகியோர் உதவித்தொகை வழங்குவதையும் பயனா ளிகளையும் படங்களில் காணலாம்.







புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியுடன் சித்தன்கேணி சிறிகணேசவித்தியாசாலை மாணவர்களுக்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் அண்மையில் கற்றல் உபகரணங்களை வழங்கியிருந்தார்.







காரைநகர் வியாவில் சைவமகா வித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் சுந்தரலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது....





வடமாகாண 500 பாடசாலைகளில் ஐந்தாண்டுத் திட்டத் தயாரிப்பில் பங்குபற்றல், முகாமைத்துவத்தைப் பிரயோகித்தல் தொடர்பான வளவாளர்களுக்கான பயிலமர்வின் 5 ஆம் கட்டம் ஆசியவாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தனபாலன் தலைமையில் மன்னார் சித்தி விநாயகர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.





வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவர்கள் தமது பகுதிப் போக்குவரத்துப் பிரச்சினைகளைச் சித்தரிக்கும் வகையில் பேருந்து வடிவத்தில் அமைக்கப்பட்ட இல்லத்தை கட்டி இழுப்பதையும் விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் மாணவி ஒருவருக்கு விருந்தினர் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பொற்பதி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கு ஒரு கொட்டு வைத்தால்
அவன் தலை மொட்டை.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கழிவு அகற்றும் செயற்பாட்டில் நவீன தொழில்நுட்பம் அவசியம்

வடக்கு மாகாணத்தில் இயங்கும் அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுஸ்தாபனங்களின் இயங்கு நிலைதொடர்பில் மறுசீரமைப்பு செய்யவேண்டிய தேவை நிறையவே உள்ளது.

ஒரு பிரதேசம் அபிவிருத்தி அடையப்பட வேண்டுமாயின் அந்தப் பிரதேசத்தின் அனைத்து வளங்களும் உச்சப் பயன்பாட்டைத் தரவேண்டும்.

இந்த வகையில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி என்பதன் அடைவு எப்படி உள்ளது? என்று யாரேனும் கேட்டால் வாயில் கை வைக்கும் அளவிலேயே நிலைமை உள்ளது.

அந்த அளவிற்கு வடக்கு மாகாணத்தின் நிர்வாகச் சீரமைப்பு இன்னமும் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

வடக்கு மாகாண அரசைப் பொறுத்தவரை இலங்கை அரசுடன் பேசுவது; வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வரும்போது அவர்களைச் சந்திப்பது; வடக்கில் நடைபெறும் விழாக்களில் கலந்து கொள்வது என்பதையே தனது பணியாகக் கருதிக் கொள்கிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர் இன்னமும் வடமாகாணத்தில் இயங்குநிலை இல்லாத அமைப்புகள் பற்றி எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

நிலைமை இப்படியாகத் தொடருமாயின், தமிழர்களுக்கு ஆளவும் தெரியாது. நிர்வாகம் நடத்தவும் தெரியாது என்றாகிவிடும். வடக்கு மாகாணத்தில் தமிழர் அரசு என்று கூறிக் கொள்ளும் நாம் எமது பிரதேசத்தை தூய்மையாக வைத்திருப்பதற்கான திட்டங்கள் எதனையேனும் தயாரித்தோமா? என்றால் இல்லவே இல்லை.

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட மாநகர, பிரதேச சபைகளின் சுத்திகரிப்புப் பணிகள் மற்றும் குப்பை கூழங்களை அகற்றுகின்ற முறைமைகள் மக்கள் மத்தியில் பெரும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.

அகற்றப்படுகின்ற குப்பை கூழங்களை கொட்டுகின்ற இடங்களால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்து வருகின்றனர். இதன் காரணமாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் இலங்கை அரசுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டங்கள் போல, இப்போது குப்பை கொட்டுவதற்கு எதிராகவும் தூய்மையான குடிநீருக்காகவும் பொதுமக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்துகின்றனர்.

இது தவிர, மக்கள் வாழும் இடங்களில் குப்பைகள் கொட்டப்படுகின்ற கொடுமைகள் சர்வ சாதாரணமாக நடந்து ஏறுவதையும் பார்க்க முடிகின்றது.

இதற்கு மேலாக தெருநாய்த் தொல்லை சொல்லிமாளா. மகிந்த சிந்தனை மலையேறிவிட்ட போதிலும் தெருநாய்களை பராமரிப்பதில் மட்டும் மகிந்த சிந்தனை இன்னமும் வடக்கு மாகாண அரசால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

காய்ச்சல் காரணமாக வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைக்குச் செல்கின்ற நோயாளர்களில் மேற்கொண்ட மருத்துவ பரிசோதனையில் முடிவு உண்ணிக் காய்ச்சல் என்பதாக உள்ளது.

தெருநாய்களின் பெருக்கம் உண்ணிக் காய்ச்சலுக்கு ஊக்குவிப்பு வழங்குகிறது என்ற உண்மைகள் மருத்துவத் துறையினால் உறுதி செய்யப்பட்டுள்ள போதிலும் தெருநாய்களை கட்டுப்படுத்த இன்னமும் பொருத்தமான பொறிமுறை கையாளப்படவில்லை.

ஆக, ஒட்டுமொத்தத்தில் வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் கழிவு அகற்றல் முறைமைகள், வீடுகளில் சேருகின்ற குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கான ஒழுங்குமுறைகள், சேகரிக்கப்பட்ட குப்பைகளை இறுதியாகக் கொட்டுகின்ற இடங்கள் என அனைத்து விடயங்களும் மனித சுகத்திற்கு மிகத் தீங்காக அமைந்திருப்பதால் இது தொடர்பில் துறைசார்ந்தவர்களின் அறிவியலை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தனித்து அரசியல் மட்டும் கதைப்பதை விடுத்து, தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பிலும் வடக்கு மாகாண அரசு கடுமையாக கவனம் செலுத்துவது கட்டாயம்.

# சர்வதேச விசாரணையாளர்கள் இங்கு வந்து சாட்சியங்களை பதிவு செய்ய வேண்டும்

## அறிக்கை பிற்போடப்பட்ட நிலையில் த.தே.ம முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச விசாரணை அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடாமல் பிற்போடப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட அக் காலப்பகுதியில் சர்வதேச விசாரணையாளர்கள் இலங்கைக்கு வந்து சாட்சியங்களாக இருக்கின்ற மக்களிடம் நேரடி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியுள்ளது.

இதனைவிடுத்து அக்காலப் பகுதியில உள்ளூர் விசாரணை தேவையில்லை என்றும் அவ்வாறான உள்ளூர் விசாரணை அறிக்கையை சிலர் ஏற்றுக் கொள்வதென்பதும் தமிழினத்திற்கு செய்கின்ற மாபெரும் துரோகம் என்று சுட்டிக் காட்டியிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதற்கு ஆதரவாகச் செயற்படுபவர்களை தேசத் துரோகிகளாக அடையாளப்படுத்துவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதான வீதியின் மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் நடைபெற்றது இனப்படுகொலையே என சாட்சியங்களாக இருக்கின்ற ஒட்டுமொத்த தமிழினத்தின் கருத்தாக வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இங்கு இராணுவம் குற்றம் இழைக்கவில்லை என்றும் இனப்படுகொலை என்ற ஏதும் நடக்கவே இல்லை என அரசாங்கம் மறுத்து வந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில் வெளியிடப்படவிருந்த இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கையை பிற்போட வேண்டுமென ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம் கோரியதன் அடிப்படையில் மேற்குலக நாடுகளின் விருப்பத்திற்கமைய ஆட்சி மாற்றமும் ஏற்பட்டதையடுத்து மேற்படி விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த அறிக்கை பிற்போடப்பட்டாலும் அக்காலப்பகுதியில் மூன்று பிரதான விடயங்களைக் குறிப்பிடுகின்றோம். இதில் முதலாவதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு நேரடியாக வந்து பாதிக்கப்பட்ட மக்களிடம் வாக்கு மூலங்களைப் பெற்று தொடர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்,

இரண்டாவதாக ரோம் சாசனப்படி சர்வதேச நீதிமன்றத்தினூடாக இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது இன அழிப்பென்பது சர்வதேச சட்ட ரீதியில் மன்னிப்பு வழங்க முடியாத குற்றமாகும்.

தாயகத்தில் நடைபெற்றது இனப்படுகொலையே என்பதனை வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களும் இங்கு நடைபெற்றதும் இனப்படுகொலை தான் என்பதனை திடமாகக் கூறியுள்ள நிலையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசும் அதனை மறுதலித்து இங்கு ஒன்றுமே நடைபெறவில்லை எனக கூறி நியாயப்படுத்துவதற்குவதற்கு முயற்சித்து வருகிறது. இவ் அறிக்கையினை பிற்போடுவதற்கு உதவியாக இருந்த சர்வதேசம் இதற்கும் உதவ வேண்டும்.

இறுதியாக பொறுப்புக் கூறல் என்ற விடயத்தில் ஐ.நா விசாரணையை உள்ளக விசாரணையாக முடக்கி விடக் கூடாது. ராஜபக்ஷ அரசின் காலத்திலும் எவ்வாறு நாம் சார்ந்த கட்சி உள்ளக விசாரணையை ஏற்றுக் கொள்ளவில்லையோ அதேபோல் தற்போதுள்ள அரசின் காலத்திலும் உள்ளக விசாரணையை ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

யுத்த வெற்றியில் தமக்கே அதிக பங்கு உண்டு எனக் கூறி வருகின்ற தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசின் உள்ளக விசாரணையை எவ்வாறு நீதியானதென ஏற்றுக் கொள்ள முடியும்? இதற்கு உடந்தையாக இருக்கும் தமிழ் அரசியல் தலைமைகளை இனத் துரோகிகளாகக் அடையாளப்படுத்துவதற்கும் தயங்க மாட்டோம்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பூகோள அரசியலில் உள்ள முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இங்கு ஓர் ஆட்சி மாற்றத்தையே விரும்பினார்களே ஒழிய தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையில்லை.

ஆகவேதான் நாம் கோருகின்றோம், தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கும் அநீதிகளுக்கும் நிலைத்து நிற்கக் கூடியதாக நீதி நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று.

ஆனால் அதற்கு தயாரில்லாத மேற்குலக நாடுகள் தமது தேவைகளுக்கு ஏற்பவே செயற்படுவதனை இந்த அறிக்கை பிற்போடப்பட்டுள்ளதன் ஊடாகவே விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே மக்கள் போராட்டத்தின் மூலமாகவே இவற்றையெல்லாம் வெற்றிகொண்டு தமிழினம் சரியான நேரிய பாதையில் செல்ல முடியும் என கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.

இவ் ஊடக சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனும் உடன் இருந்தார். (செ-4)

## த.தே.கூட்டமைப்புடன் இணையுமாறு த.தே.ம.முன்னணிக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் ஒரே சக்தியாக விளங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வந்து இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ் நல்லூரிலுள்ள விடுதியொன்றில் நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றது. இதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்றுக் கொண்டு கூட்டமைப்போடு இணைவதற்கு முன்வர வேண்டும்.

நாம் ஒன்றிணைவதன் மூலம் எம்முடைய பலம் மேலும் அதிகரித்து சர்வதேச ரீதியில் எமது பிரச்சினையை கையாள முடியும். நாம் பிரிந்திருந்தால் அப் பிரிவைப் பயன்படுத்தி வேறு சிலர் அரசியலில் இலாபம் ஈட்டக் கூடும். ஆகவே மீண்டும் இணைந்து செயற்படுங்கள் என்றார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தீர்மானத்தின் பின்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படத்தயார் என்று முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அதனை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் வரவேற்றிருந்தனர். இந்நிலையில் சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### உள்ளம் கடவுளிடம் இருக்கட்டும்



✦ புலி மற்ற மிருகங்களைக் கொன்றுவிடும். அதுபோல பக்தி என்னும் புலி காமம் குரோதம் முதலானவற்றைக் கொன்றுவிடுகிறது. இதயத்தில் பக்தி வளருமானால் காமமும் ஏனைய மிருக உணர்ச்சிகளும் அடியோடு மறைந்துவிடும்.

✦ பொட்டலம் கிழிந்து கடுகு சிதறிவிட்டால் அவற்றை ஒன்று சேர்ப்பது மிகவும் கடினம். அதுபோல பல்வேறு திசைகளில் ஓடுகின்ற மனத்தை உட்குவித்து ஒருமுகப்படுத்துவது எளிதான செயல்அல்ல. மனதை ஒருமுகப்படுத்துவதற்கு நல்லவர்களுடன் நாடிச் சேர்வது மட்டுமே வழி.

✦ சிறு இழை ஒன்று நீட்டிக் கொண்டிருந்தாலும் ஊசியின் காதுவழியாக நூல் நுழைய முடியாது. உலகப் பொருட்களில் சிறிது பற்று இருந்தாலும் நம்மால் கடவுளை அணுக முடியாது.

✦ மனைவி, மக்கள், பெற்றோர் அனைவருடனும் சேர்ந்து குடும்பமாக வாழுங்கள். ஆனால், உள்ளத்தை மட்டும் கடவுளிடம் இருத்துங்கள்.

✦ முட்செடிகளை விரும்பித் தின்னும் ஒட்டகத்தின் வாயில் ரத்தம் ஒழுகும். அதுபோல, உலகியல் இன்பங்களில் நாட்டம் கொண்டு மனிதன் எத்தனையோ வேதனைகளையும், துன்பத்தையும் அனுபவிக்கிறான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கத்துக்குட்டி ஸ்கொட்லாந்திடம் போராடி வென்றது நியூசிலாந்து

உலகப் கிண்ண போட்டியின் 6ஆவது லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து அணிகள் நேற்று மோதின. இதில் நாணயசுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் பந்து வீச முடிவு செய்தது.

இதனையடுத்து, தனது துடுப்பாட்ட திறமையை காட்ட வந்த ஸ்கொட்லாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க வீரர்கள் வந்த வேகத்திலேயே நடையை கட்டினார்கள். நியூசிலாந்து வீரர்களின் மிரட்டலான பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் மெக் லியோட், கார்டினர் அடுத்தடுத்து டக் அவுட் ஆகி வாத்து நடை நடந்தனர். ஒரு கட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி 12 ஓட்டங்களில் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. எனினும் சுதாரித்து விளையாடிய மேச்சன்-பெரிங்டன் ஜோடி அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கை எட்ட வழிவகை செய்தது. மேச்சன் (56 ஓட்டங்கள்), பெரிங்டன் (50 ஓட்டங்கள்) அரை சதம் அடித்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க ஸ்கொட் லாந்து அணி 36.2 ஓவர்களி லேயே அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து 142 ஓட்டங்கள் மட் டுமே எடுக்க முடிந்தது.

சிறப்பாக பந்து வீசிய வெட்டோரி, கோரி அன்டர்சன் தலா 3 விக்கெட்டுகளையும், சௌதி மற்றும் பவுல்ட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

143 ரன்கள் என்ற எளிதான வெற்றி இலக்குடன் நியூசிலாந்து அணி விளையாட தொடங்கியது. தொடகக ஆட்டக்காரர்களாக கப்டில்லும், மெக்கல்லமும் களமிற ங்கினர். இருவரும் நிதானமாக விளையாடிய நிலை யில் குப்டில் 17 ரன்னில் அவுட்டானார். அடுத்து வில்லியம்சன் களமிறங்கினார். அவரும் பொறுமையை கையாண் டார். இந்த ஜோடி அவ்வப்போது பவுண்டரிகளையும் விரட்டியது. இந்நிலையில் 7வது ஓவரின் கடைசி பந்தில் மெக்கல்லம் 15 ரன்னில் அவுட்டானார். அடுத்து வந்த ரெய்லர் 9 ஓட்டங்களில் வெளியேறினார். இதைய டுத்து எலியட் வில்லியம்சனுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் 4வது விக்கெட்டுக்கு 40 ஓட்டங்கள் சேர்த்தனர். இந்நிலையில் வில்லியம்சன 38 ஓட்டங்களில் அவுட்டானார். சில நிமிடங்களில் எலியாட்டும் 29 ஓட்டங்களில் நடையை கட்டினார். அடுத்து வந்த வீரரகள் பெரிதாக சோபிக்காத போதிலும் வெற்றிக்கான இலக்கு எளிதாக இருந்ததால் 24.5 ஓவரிலேயே 146ஓட்டங்கள் குவித்து 3 விக்கெட் வித்தியாசத்தல் நியூசிலாந்து வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சிறப்பாக பந்து வீசி ஸ்கொட்லாந்து அணியின் முன்னணி ஆட்டக்காரர்களை டக் அவுட்டாக்கிய போல்ட் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.






## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

ஸ்கொட்லாந்து (all out; 36.2 ஓவர்கள்) 142

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| மேச்சன் | 56 | 79 |
| பெரிங்டன் | 50 | 80 |
| கோஷ் | 14 | 18 |
| டேவி | 11* | 19 |

## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

நியூசிலாந்து (24.5 ஓவர்கள்) 146/7

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| வில்லியம்ஸன் | 38 | 45 |
| எலியட் | 29 | 31 |
| கப்ரில் | 17 | 14 |
| பிரெண்டன் மக்கலம் | 15 | 12 |

## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

நியூசிலாந்து பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| வெட்டோரி | 8.2 | 1 | 24 | 3 |
| அண்டர்சன் | 05 | 1 | 18 | 3 |
| போல்ட் | 06 | 1 | 21 | 2 |
| சௌதி | 08 | 3 | 35 | 2 |

## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

ஸ்கொட்லாந்து பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| ஜோஷ் டேவி | 07 | 0 | 40 | 3 |
| இயால வார்ட்லா | 9.5 | 0 | 57 | 3 |
| மஜித் ஹக் | 04 | 0 | 21 | 1 |
| ராப் டெய்லர் | 04 | 0 | 27 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி உத்தியோகத்தர் இடமாற்றத்தை தற்காலிகமாக பிற்போட கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தை தற்காலிகமாகப் பிற்போடுமாறு யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தற்போது யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் இடமாற்றங்களை பின்வரும் காரணங்களின் நிமித்தம் தற்காலிகமாகப் பிற்போடுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்படி இடமாற்றத்தை எமது தேசிய தொழிற் சங்கமான அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை எமது தேசிய சங்கம், பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன் இடமாற்ற சபை கூடும்போது அதில் கலந்து கொள்ள வேண்டாமென மாவட்ட சங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வாழ்வின் எழுச்சித் திணைக்களம் உருவாக்கப்பட்டு பதவி நிலைமைகள் முழுமையாக ஒழுங்குபடுத்தப்படாத நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட இருக்கும் இடமாற்றம் பொருத்தமற்றதொன்றாகவே காணப்படுகின்றது.

இடமாற்றம் தொடர்பாக நடைமுறைகள் உரியகால அவகாசம் வழங்கப்படாது இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றமையானது உத்தியோகத்தர்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்தியுள்ளது.

இடமாற்றம் தொடர்பாக கோரப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் வலய ரீதியாக இடமாற்றம், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு இடையேயான இடமாற்றங்கள் என்பன கோரப்பட வில்லை.

நியமனம் கிடைத்து இதுவரை காலமும் கிராம மட்டத்தில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அலுவலக வாடகை வழங்கப்படவில்லை. இந்நிலையில் இடமாற்றத்தில் செல்கின்ற உத்தியோகத்தர்கள் கிராமமட்ட அலுவலகங்களைப் பேணுவது சிரமமானதாகும்.

ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் அனைவரையும் ஒரே தடவையில் இடமாற்றம் செய்யும்போது சமுர்த்தி வங்கிகளின் நிதி நிர்வாக நடவடிக்கைகள் பாதிப்படைவதுடன்ஸ்திரத்தன்மையும்பாதிப்படையும்.

எனவே மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு தற்பொழுது மேற்கொள்ள விருக்கும் இடமாற்றங்களை தற்காலிகமாகப் பிற்போடுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என கோரி அறிக்கையின் பிரதிகள் சஜித் பிறேமதாச (பா.உ) வீடமைப்பு சமுர்த்தி விவகார அமைச்சர்), திருமதி விஜயகலா மகேஸ்வரன் (பா.உ) மகளிர் விவகார பிரதியமைச்சர்), பணிப்பாளர் நாயகம்-வாழ்வின் எழுச்சித் திணைக்களம், மாவட்டப் பணிப்பாளர்-வாழ்வின் எழுச்சித் திணைக்களம்-யாழ்ப்பாணம், தலைவர்/செயலாளர்-அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கம் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (செ-11)

## குற்றவாளிகள்...

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமை ஆணையகத்தின் அமர்வில் இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என பலராலும் நம்பப்பட்ட நிலையில், இவ்விசாரணை அறிக்கையை 6 மாதங்களுக்குப் பிற்போடுவததென மனித உரிமைகள் ஆணையகம் தனது முடிவை அறிவித்தது.

இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கையை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையகம் ஏற்றுக்கொண்டுள்ளதோடு, இவ் ஒருமுறை மட்டுமே இதனைப் பிற்போட முடியும் என்றும் அறிவித்தது.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் இந்த முடிவு இலங்கையில இடம்பெற்ற யுத்தக்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றவாளிகள் தண்டனையில் இருந்து தப்பிக்க இடமளிக்க ஏதுவாக அமைந்துவிடக் கூடாதென சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய வலய பணிப்பாளர் ரிச்சாட் பெனாட் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் அறிவிப்பு விசாரணை அறிக்கையை மேலும் வலுப்படுத்தி உறுதியான ஆவணத்தை தயாரிக்க வழியேற்படுத்தும் என்றும் இலங்கை அதிகாரிகளின் பொறுப்புக்கூறலை அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியளித்தவர்களுக்கு நீதி வழங்க மனித உரிமை கவுன்ஸில் விழித்திருக்க வேண்டும் எனவும் சாட்சியாளர்கள் அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய வலய பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ)

## யாழ்-வன்னி...

டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா தலைமையகத்தின் கட்டளையதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேஜர் ஜெனரல் சன்ன பி குணதிலக்க இலங்கை இராணுவத்தின் சுயாதீனப்படையின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்

மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தலைமையக மத்திய கட்டளையதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். வன்னி கட்டளையதிகாரியாக இருந்த பொனிபொஸ் பெரேரா தலைமையக அதிகாரி அலுவலகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இராணுவ தலைமையகத்தில் பணியாற்றும் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த யாழ்ப்பாண கட்டளை தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேஜர் ஜெனரல் ஜே வலகம கிழக்கின் தலைமையக கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண தலைமையக அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ், இராணுவ தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். வன்னிக்கான கட்டளை தளபதியாக அமல் கருணாசேகர நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது கட்டாய விடு முறையில் அனுப்பி வைக்கப்பட்ட மேஜர் ஜெனரல் மஹேஷ் சேனநாயக்க இராணுவத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (செ)

## மரண அறிவித்தல்



### கணபதி கந்தையா

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தையா நேற்று (17.02.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-பார்வதியின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் கணவரும், தர்மராஜா, அருமைரத்தினம், திருச்செல்வம், கணேசலிங்கம், ஞானேஸ்வரன், மகேந்திரம், சீதாலட்சுமி, ஜெயராசா, அருளானந்தம், பொன்ராசா, கண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (9550)

தகவல்: குடும்பத்தினர்




## 7வது லீக் ஆட்டம்

# ஆப்கானிஸ்தான் - பங்களாதேஷ் இன்று பலப்பரீட்சை



உலக கிண்ணத் தொடரின் 7ஆவது லீக் போட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள கான்பெராவில் இன்று நடக்கிறது.

இப்போட்டி பிரிவு ஏயில் உள்ள பங்களாதேஷ் - புதுமுக அணியான ஆப்கானிஸ்தான் ஆகியவற்றுக்கு இடையில் நடக்கிறது.

பங்களாதேஷ் அணி 1999இல் அறிமுகம் ஆனது. 5ஆவது முறையாக உலக கிண்ணத்தில் ஆடுகிறது. அந்த அணி பாகிஸ்தான் (1999), இந்தியா, தென்னாபிரிக்கா (2007), இங்கிலாந்து (2011) போன்ற முன்னணி அணிகளை உலக கிண்ணப் போட்டிகளில் வீழ்த்தி இருக்கிறது.

இதனால் பங்களாதேஷ் புதுமுக அணியான ஆப்கானிஸ்தானை எளிதில் வீழ்த்தி வெற்றியுடன் தனது கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் உள்ளது. அந்த அணியின் முன்னாள் தலைவர் சகீப் அல் ஹசன், தற்போதைய அணித் தலைவர் மோர்டசா, தமீம் இக்பால் போன்ற சிறந்த வீரர்களும் உள்ளனர்.

உலக கிண்ண போட்டிகளில் முதல் முறையாக விளையாடும் ஆப்கானிஸ்தான் அணி பங்களாதேஷ்க்கு அதிர்ச்சி கொடுக்கும் வகையில் விளையாடுமா? என்ற எதிர்பார்ப்பு மேலோங்குகிறது.

இரு அணிகளும் மோதிய ஒரே ஒரு ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்றிருந்தது. கடந்த ஆண்டு நடந்த ஆசிய கோப்பையில் அந்த அணி 32 ஓட்டங்களால் பங்களாதேஷை வீழ்த்தி இருந்தது. இதனால் ஆப்கானிஸ்தான் நம்பிக்கையுடன் உள்ளது.

அணித் தலைவர் மொஹமட் நபி, முன்னாள் அணித் தலைவர் நவரோஸ், தவ்லத், ஹமித் ஹாசன் போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர்.

இலங்கை நேரப்படி இன்று காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த போட்டி ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் அலைவரிசையில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# ஆஸி அணியிலிருந்து போல்க்னர் விலகல்



நடைபெற்று வரும் உலகக்கிண்ண போட்டித் தொடரிலிருந்து அவுஸ்திரேலிய வீரர் ஜேம்ஸ் போல்க்னர் விலகியுள்ளார்.

உலகக்கிண்ண தொடரின் ஆரம்ப லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 111 ஓட்ட வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

இந்த போட்டியில் காயம் காரணமாக அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை ஆட்ட க்காரர் ஜேம்ஸ் போல்க்னர் களம் இறங்க வில்லை.

24 வயதான போல்க்னர் தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வருகிறார். காயம் இன்னும் முழுமையாக குணமடையாததால் அடுத்து வரும் போட்டிகளிலும் அவர் விளையாடுவது சந்தேகம்.

எதிர்வருகிற 21ஆம் திகதி பிரிஸ்பேனில் நடைபெறும் 2வது லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணி, பங்களாதேஷை சந்திக்கிறது.

இந்த போட்டியில் விளையாடும் வாய்ப்பை போல்க்னர் இழந்துள்ளார். எனினும் விரைவில் களம் திரும்புவேன் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# மோசமான வார்த்தைகளால் சீண்டிய டரன் சமி, ஜோன் மூனிக்கு அபராதம்!

உலகக் கிண்ணத் தொடரின் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியின் போது, சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறைகளை மீறியதற்காக டரன் சமி, ஜோன் மூனிக்கு அபாரதம் விதிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் நெல்சனில் நடந்த உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் அயர்லாந்து- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின.

இந்தப் போட்டியின் போது மேற்கிந்திய தீவு களின் முன்னாள் அணித்தலைவர் டரன் சமி, எதிரணி வீரரை தகாத வார்த்தையால் திட்டியதாகவும், பிடியை தவறவிட்டதால் அயர்லாந்து வீரர் ஜோன் மூனி சக வீரரை மோசமான வார்த்தைகளால் விமர்சித்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இது குறித்து போட்டி நடுவர்கள் அளித்த புகாரின் பேரில் சர்வதேச கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது. இதில் இருவரும் தவறை ஒப்புக்கொண்டதால் இருவருக்கும் போட்டி கட்டணத்தில் தலா 30 சதவீதத்தை அபராதமாக விதித்துள்ளது.

## கோத்தாவிடம்...

திணைக்களம் மேலும் ஒரு வாக்கு மூலத்தை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹன, கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது வெளியிட்டார்.

சமன்த குமார எனப்படும் வெலே சுதா பாகிஸ்தானிலிருந்து அனுப்பிய களனி - சிங்காரமுல்ல போதைப் பொருள் களஞ்சிய சாலை தொடர்பில் விசாரணைகள் இடம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த இடத்தை குத்தகைக்கு பெற்றிருந்த பிரித்தானிய பிரஜை மற்றும் அதில் சேவையாற்றிய இரண்டு பாகிஸ்தானிய பிரஜைகளை கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸாரின் உதவியை பெறவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (செ)

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

**அதிக ஓட்ட குவிப்பு**

டேவிட் மில்லர் (தெ.ஆ) 138
2.ஆரோன் பின்ஞ் (ஆஸி) 135
3.ஜே.பி டுமினி (தெ.ஆ) 115

**அதிக விக்கெட்டுக்கள்**

டானியல் வெட்டோரி (நியூசி) 5
2.மிட்சல் மார்ஸ் (ஆஸி) 5
3.கோரி அண்டர்சன் (நியூசி) 5

**அதிக 4 ஓட்டங்கள்**

பிரெண்டன் மக்கலம் (நியூசி) 13
2.ஆரோன் பின்ஞ் (ஆஸி) 12
3.ஜேம்ஸ் ரெய்லர் (இங்கி) 11

**சிறந்த சராசரி (பந்துவீச்சு)**

ஜீவன் மெண்டிஸ் (இலங்) 2.50
2.மிட்சல் மார்ஸ் (ஆஸி) 6.60
3.கோரி அண்டர்சன் (நியூசி) 7.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிக்கை பிற்போட்டமை...

நிராகரிக்கும் செயலாகும்.

இந்த உள்நாட்டு விசாரணை கம்போடியாவிலும் நடைபெற்று தோல்வி கண்டது.

ஐ.நா.விசாரணையின்போது விசாரணையாளர்கள் நாட்டுக்குள் வர அனுமதிக்கப்படவில்லை.

அவர்களுடைய காலத்தை நீடித்து நாட்டுக்குள் வந்து விசாரணையை நடத்த இலங்கை அரசு இடமளித்தால், காலத்தை நீடிக்க நாம் இணக்கம் தெரிவிக்கலாம்.

வெளிவகார அமைச்சர் மங்கள சமரவீர வாஷிங்டனில் வைத்து அமெரிக்க ராஜதந்திரிகளிடம் பேசும்போது வெளிநாட்டு விசாரணையாளர்களுக்கு 07.02.2015 அன்று அழைப்பு விடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்தே சுமந்திரனும் மேற்சொன்ன விடயத்தினை கூறியிருப்பதானதுதிட்டமிட்ட ஒரு செயற்பாட்டினையும், விசாரணை அறிக்கை வெளியாவதை ஒத்தி வைப்பதற்கு உள் இணக்கம் ஏற்படுத்திவிட்டு விடப்படும் அறிக்கை போன்றே தோன்றுகின்றது.

மேலும் மங்கள சமரவீர வாஷிங்டனில் வைத்து அமெரிக்க ராஜதந்திரிகளிடம் பேசும் போது 1965-ம் ஆண்டுக்கு பின்னர் தமிழ்க் கூட்டமைப்புத் தலைமைகள் சுதந்திர நிகழ்வில் கலந்து கொண்டமையானது, புதிய அரசாங்கத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும், தாம் எடுக்கும் நிலைப்பாடுகளுக்கு அவர்கள் ஆதரவுத்தன்மையை வெளிப்படுத்துவதாகும் இருப்பதாக கூறினார்.

இப்படியாக தமிழ்க் கூட்டமைப்பின் தலைமை நடந்துகொள்வதால், சர்வதேச விசாரணையின் மூலம் நீதியையும் அரசியல் தீர்வினையும் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைத்திருந்த மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தினையும், எமது மக்களின் இனப்படுகொலையை ஐக்கிய நாடுகள் சபை வரை கொண்டு செல்ல உழைத்த புலம் பெயர்ந்த மக்களுக்கும் இதற்காக உழைத்த பல சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றிக்கும் மிகுந்த ஏமாற்றத்தினையும், சலிப்பினையுமே ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## ஜனாதிபதி மைத்திரிபாலவின்...

தாக அதிகாரிகள் இந்தியா ருடே இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளனர்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி யுடனும் சீனாவின் உயர மட்டத் தலைவர்களுடனும் மங்கள சமரவீர பேச்சுவார்த்தை நடத்த வுள்ளார்.

அத்துடன் சீனப் பிரதமர் லீ கிக்கியாங் அல்லது ஜனாதிபதி ஜீ ஜின் பிங்கை மங்கள சமரவீர சந்திப்பார் என வட்டாரங்கள் கூறியுள்ளன.

சீனாவுக்கான சிறிசேனவின் விஜயமானது நிகழ்ச்சி நிரலில் உயர் மட்டத்தில் இருப்பதாக அந்த வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

கொழும்பிலுள்ள புதிய அரசாங்கத்துடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கு பீஜிங் முயற்சிகளை மேற் கொண்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் முன்னைய நிர்வாகத்திலும் பார்க்க இந்தியாவின் கவலைகள் குறித்து அதிகளவிற்கு உணர்வுபூர்வமாக புதிய அரசாங்கம் இருக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

இந்நிலையில் புதிய நிர்வாகத்துடன் பிணைப்புகளை வலுப்படுத்தும் முயற்சிகளை பீஜிங் முன்னெடுத்திருக்கிறது.

இந்த மாதம் முற்பகுதியில் உதவி வெளிவிவகார அமைச்சர் லியோ ஜியான போவை கொழும்பிற்கு சீனா அனுப்பியிருந்தது.

அரசாங்கத்தின் விசேட தூதுவராக அவர் வருகை தந்திருந்தார்.

சீனாவின் முதலீட்டை புதிய அரசாங்கம் வரவேற்பதாகவும் சீனாவுடன் பல்வேறு துறைகளில் நடைமுறைச் சாத்தியமான ஒத்துழைப்பை வலுப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் அச்சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் சமரவீர உறுதியளித்திருந்ததாக சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

அத்துடன் கடல்மார்க்க பட்டுப் பாதை திட்டத்தில் இலங்கையை முக்கியமான பங்காளியாக சீனா நோக்குகின்றது.

தென்கிழக்கு ஆசியாவில் துறைமுகங்களை நிர்மாணிப்பதையும் சுதந்திர வர்த்தக வலயங்களை அமைப்பதையும் சீனா நோக்கமாக கொண்டிருக்கின்றது.

இந்த வாரம் 40 பில்லியன் டொலரை சீனா செலவிட்டிருக்கிறது.

பிராந்தி யத்திலுள்ள நாடுகளின உள்சார் கட்டமைப்பு திட்டங்களுக்கு ஆதரவாக இந்த நிதி பயன்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டுக் கடன் அதிகரித்து வரும் நிலையில் திண்டாடும் தருணத்தில் இலங்கைக்கு அதிகளவு நிதி ஆதரவு தேவைப்படுகிறது.

இந்நிலையில் சீனாவின் இந்த நிதி இலங்கைக்கு ஆறுதலளிக்கும் எனக் கருதப்படுகிறது.

அடுத்த வாரம் மேற்கொள்ளவுள்ள தனது சீனப் பயணத்தை அமைச்சர் சமரவீர பயன்படுத்தும் சாத்தியப்பாடு காணப்படுகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் உள்சார் கட்டமைப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை இலங்கைக்குக் காணப்படுவதாக பீஜிங்கிற்கு சமரவீர உறுதியளிப்பார் என எதிர்பார்க்கப்படு கிறது.

அதாவது சீனாவுடனும் இந்தியா உட்பட வேறு நாடுகளுடனும் பொருளாதார உறவுகளை தொடர்ந்தும் இலங்கை வலுப்படுத்தும் என பீஜிங்கிற்கு அவர் உறுதியளிப்பார் எனக் கருதப்படுகிறது. (செ-11)

## இலங்கை - இந்திய...

குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், இலங்கையும் இந்தியாவும், சீனாவின் மிக முக்கியமான அயல் நாடுகள்.

அமைதி மற்றும் செழுமைக்கு மூலோபாய ஒத்துழைப்பை மேலும் விருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற முடியும் என்று நாம் நம்புகிறோம்.

இலங்கையுடன் நீண்டகால நட்புறவு மற்றும் நேர்மையான பரஸ்பர உதவியுடன், மூலோபாய கூட்டு ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

சீன - இந்திய உறவுகள், சீன - இலங்கை உறவுகள் அபிவிருத்திக்கு உதவும் என்று நம்புகிறோம்.

அதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலையான உறவுகள் வளர்ச்சியடைவதை நாம் வரவேற்கிறோம்.

இந்த மூன்று இணை உறவுகளை பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஊக்கமளிக்க முடியும் என்றால், அது பிராந்தியத்தின் அமைதி, உறுதிப்பாடு, அபிவிருத்திக்கு பயனுடையதாக இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (செ)


**வேலைவாய்ப்பு**

நீங்கள் தொழில் தேடுபவரா?

விஸ்தரிக்கப்பட்டு வரும் எமது சர்வதேச கம்பனியின் புதிய கிளைகளுக்குரிய வேலை வெற்றிடங்கள் உள்ளன.

● அலுவலக உதவியாளர் ● களஞ்சியப்படுத்துநர் ● மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்தினைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை

➡ தங்குமிட வசதிகள் உண்டு ➡ வயதெல்லை 18-28

➡ சம்பளம் 15,000/= - 18,000/= (C-147)

தொடர்புகளுக்கு: 0775566226, 0777981471, 0214545634

**FRENCH DOCUMENTARIES - JAFFNA**

**Alliance Française de Jaffna**

cordially invites you to the screening of

**MOZAMBIQUE, DIARIES OF AN INDEPENDANCE**

Cinema 's power to educate, in the aftermath of Mozambique' s Independance. (2003, 52 min.)

on

Thursday 19 February 2015 at 4:00 p.m.

at

**Alliance Française de Jaffna.**

61, Kachcheri-Nallur Road, Jaffna.

Phone: 021 222 8093

(9547)

Portuguese Language. English subtitles. Free entrance

**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

நேரம் : காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

தரம் 1 முதல் 11 வரையான இரண்டாம் மொழி சிங்கள Model Paper வெளி வந்துவிட்டது.

● 15 % முதல் 20 % வரை விலைக்கழிவு.

Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus), English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது. பத்திரிகைகளும் பெற்றுக் கொள்ளலாம்

**யாழ். புத்தகசாலை**

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

(C-190)

தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552


## இலங்கையில் ஏற்பட்டுள்ள...

5 பில்லியன் டொலர் களுக்கும் மேலான வர்த்தகம் இடம்பெறுகின்றது.

இரு நாடுகளும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அடித்தளமாக வைத்து பொருளாதார உறவுகளை வலுப்படுத்த வேண்டும். நிறுவனங்களின் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்புகளை மேலும் நெருக்கமாக்குவது குறித்து இந்தியா மிகுந்த ஆர்வம் கொணடுள்ளது.

இந்தியா முதன் முதலாக இலங்கையுடனயே சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

பொருளதார ரீதியான இணைந்த செயற்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கான தருணமிது.

கடந்த வருடம் இந்திய பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப்பாதைக்கு திரும்பியுள்ளது. இலங்கை இதிலிருந்து பலன் பெறக்கூடிய சிறந்த நிலையிலுள்ளது.

மீனவர்கள் விவகாரம் மிகவும் உணர்வுபூர்வமானது, இரு நாட்டு மீனவர்களின் வாழ்வாதார கரிசனைகள் இதில் தங்கியுள்ளன.

இந்த விவகாரத்தை இரு நாடுகளாலும் மிகுந்த அவதானத்துடனும் உரிய பக்குவத்துடனும் கையாள முடியும் என்பதில் சந்தேகமில்லை.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தனித்துவமானவை, வரலாறு, கலாசார, இன மற்றும் நாகரிக உறவுகளையும், மக்களுக்கு இடையிலான தொடர்புகளையும் அடிப்படையாக கொண்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் உயர்மட்ட அரசியல் தொடர்புகள், அதிகரித்து வரும் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள், உட்கட்டமைப்பு தொடர்புகள், பாதுகாப்பு உறவுகள் மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பிலான புரிந்துணர்வு ஆகியவற்றை அடிப்படையாகவும் கொண்டவை.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்தியாவும் மிகவும் ஆழ்ந்த அக்கறையுடன் அவதானித்து வருகின்றது, 2009 இல் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் தோன்றியுள்ள வரலாற்று ரீதியிலான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கையின் சிறுபான்மை தமிழர்கள் தொடர்பிலான விவகாரங்களுக்கு தீர்வை காண முயல வேண்டும் என பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். (செ)

## சுவர் இடிந்து...

ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் பெற்றோர் மயிலிட்டி பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து விக்கிராவை நலன்புரி முகாமில் வசித்து வருகின்ற நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குழந்தை வீட்டிற்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த போதே இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.

உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.

INTERNATIONAL DIPLOMAS.

ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

(9546)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்


## கனகசுந்தர...

குடற் புற்று நோயினால் நீண்டகா லமாக பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் அங்கிருந்து இருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மாற்றப்பட இருந்த நிலையிலேயே நேற்று மாலை உயிரிழந்துள்ளார.

இவர், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் கிராம சேவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர் கடந்த 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம் பெற்ற வடமாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வடமாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு பொது அமைப்புக்களின் ஊடாக பல்வேறு சமூக சேவைகளையும் மேற்கொண்டு மக்களின் நன்மதிப்பையும் கௌரவத்தையும் இவர் பெற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் இறுதிக் கிரியைகள் நாளை அவரது முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் உள்ள இல்லத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (செ-4,28)


**ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனை**

Lanka Farm இன் ஒருநாள் கலவன் ஊர்க் கோழிக்குஞ்சுகள விற்பனைக்கு. (9548)

விலை 66 /-

வான்கோழிக் குஞ்சும் விற்பனைக்குண்டு

தொடர்பு : 0777531344. 0779789230

**SPOKEN SINHALA**

**03 Months (Sat/Sun)**

புதிய பிரிவு ஆரம்பம்

21.02.2015 காலை 10.00

இப்பிரிவானது சனி,ஞாயிறு தினங்களில் காலை 10.00 - 12.00 வரை இடம்பெறும்

மிகக்குறுகிய காலத்தில் சிங்களத்திப் உரையாட மிகச்சிறந்த பாடநெறி

சிங்கள இரண்டாம் மொழிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு விசேட வகுப்பு

அனுபவம்மிக்க சிறந்த விரிவுரையாளரால் நடாத்தப்படுகின்ற சிறப்பான பாடநெறியில் இணைந்திடுங்கள்

**E-CITY COLLEGE**

இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

0212217106 / 0773400418

(C-141)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org